உ

சிவமயம்

வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்
வெள்ளிக் கொம்பன் விநாயகனைத்தொழத்
துள்ளி ஓடும் தொடர்ந்த வினைகளே
வெள்ளைத் தாமரை வீற்றவளைத் தொழ
புத்தி மிகுத்து வரும்

நாவற்குழி சித்திவிநாயகர் சனசமூக நிலைய

# வெற்றிவேல்

## கலாச்சார மன்று

வாழ்வாங்கு வாழ்ந்த சைவப் பெரியார்
முத்தையா வெற்றிவேல் (1885 - 1953)
அவர்களின் ஞாபகமாக நிறுவிய
கலாச்சார மன்று (வெளித் தோற்றம்)




# திறப்பு விழா சிறப்பு மலர்

*(1989 - 06 - 04)* (இலவச அன்பளிப்பு)

*NAVATKULI*
*SITHTHY VINAYAGAR COMMUNITY CENTRE*
*VETTIVEL CULTURAL MANTRU*
*FREE SOUVENIR — 1989 - 06 - 04*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவற்குழி

# சித்திவிநாயகர் சனசமூக நிலைய வெற்றிவேல் கலாச்சார மன்று

# திறப்பு விழா

காலம்: 04 - 06 - 1989 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சித்திவிநாயகர் சனசமூக நிலைய வெற்றிவேல் கலாச்சார மன்று

நேரம்: பிற்பகல் 4 - 00 — 6 - 00 மணிவரையுள்ள சுபவேளை

தலைவர்: திரு. நா. செ. நாகரத்தினம் அவர்கள் [நிலைய போஷகர்]

பிரதமவிருந்தினர்: கலாநிதி வெ. திருஞானசம்பந்தர் அவர்கள்
[பட்டயக்கணக்காளர், திருஞானஸ் அன்கோ]

## நிகழ்ச்சிகள்

* மங்கள விளக்கேற்றல்: திருமதி மனோன்மணி திருஞானசம்பந்தர்
  திருமதி நா. செ. நாகரத்தினம்
* கடவுள் வணக்கம்:
* பிரதம விருந்தினர் கலாநிதி வெ. திருஞானசம்பந்தர் அவர்களால் கலாச்சார மன்று திறந்துவைத்தல்
* திருமதி மனோன்மணி திருஞானசம்பந்தர் அவர்களால் வெற்றிவேல் அவர்களின் உருவப்படம் திரைநீக்கம் செய்துவைத்தல்
* பிரதம விருந்தினரை மேடைக்கு அழைத்து வருதல்
* தலைவர் உரை: திரு நா. செ. நாகரத்தினம் அவர்கள்
* வரவேற்புரை: திரு த. கிருஷ்ணமோகன் *B. A. Hons* அவர்கள்
* திறப்புவிழா சிறப்புமலர் சமர்ப்பித்தல்:
  செல்வன் திருஞானசம்பந்தர் திருக்குமரன் அவர்கள்
  செல்வி திருஞானசம்பந்தர் திருக்குமரிகை அவர்கள்
* பிரதம விருந்தினர் உரை: கலாநிதி வெ திருஞானசம்பந்தர் அவர்கள்
* சிறப்பு விருந்தினர்களின் ஆசியுரைகள்:
  * திரு. இ. கந்தசாமிக்குருக்கள் அவர்கள் (பிரதமகுரு நா. சி. வி. ஆலயம்)
  * திரு சி. தில்லைநாதன் ,, (ஆங்கில ஆசிரியர்)
  * திரு. த. முத்துக்குமாரசாமி *B.A .Hons* அவர்கள் (அதிபர் நா. ம. வித்தியாலயம்
  * பண்டிதர் திரு சு. வேலுப்பிள்ளை (சு. வே) அவர்கள்
  * செல்வி இ. அருந்ததி அவர்கள் (நிலைய அங்கத்தவர்)
  * திரு. பொ. சுப்பையா அவர்கள் (சமாதான நீதிவானும். அறிவொளிமன்ற தலைவரும்)
  * திரு. இ. சொக்கலிங்கம் அவர்கள் (ஆங்கில ஆசிரியர்)
  * திரு. த. தியாகராஜா அவர்கள் (இளைப்பாறிய அதிபர்)
  * திரு. ஆ. அமிர்தலிங்கம் அவர்கள் (தலைவர் சி. வி ச. சமூகநிலையம்)
* பதிலுரை: பிரதமவிருந்தினர் வெ. திருஞானசம்பந்தர் அவர்கள்
* நன்றியுரை: நிலைய செயலாளர்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

நன்றி

இங்ஙனம்
சித்திவிநாயகர் சனசமூகநிலையம்
நிர்வாகிகளும், அங்கத்தவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

நல்லூரின் அயலூர் உத்தமர் வாழ் நற்றவப்பதி
நாவற்குழி வாழ்வாங்கு வாழ்ந்த
சைவப் பெரியார் முத்தையா

# வெற்றிவேல்

அவர்கள்




1953-ம் ஆண்டு மறைந்தும் மறையாமல்
மௌனமாக அமர்ந்து ஆத்மீக நிறைவுக்காகவும்
அமைதிக்காகவும். ஆண்டவனை அறியும்
ஆய்வில் அல்லும் பகலும் உறங்காது கண்
விழித்திருக்கும் புனிதத்திரு அவை
சித்தி விநாயகர் சனசமூக நிலைய
வெற்றிவேல் கலாச்சார மன்று, நாவற்குழி
1989-06-04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

நல்லூருக்கு அயலூர் நாவற்குழியூர்
வாழ்ந்த சைவப் பெரியார்

# முத்தையா வெற்றிவேல் (1885-1953)

அவர்களின்

## சிந்தனையும் அவற்றைத் தழுவிய மணிவார்த்தைகளும்

அன்பும் சிவமே, அறிவும் சிவமே
அன்பே வாழ்வு, அன்பே அறன்
அன்பை அறிமுகம் செய்பவன் அவனே
அன்பு எங்கும் உண்டு
அன்பை வளர், அறிவு வளரும்.
அறிவு இறைவனை அறிதல்
அன்பும் அறிவும் இறைவனின் இருப்பிடம்
அன்புள்ளவர்க்கு என்றும் இன்பம்
அன்பும் அறிவும் அறனும் உடையான் என்றும்
ஆனந்தம் உடையான்
அன்பால் செய்ய முடியாதது எதுவும் இல்லை.
அன்புள்ள புன்னகை பொன் நகையிலும் நிறைவுடையது
அன்பால் பகைவரை நண்பராக்கலாம்
அன்பால் பகைவரை நண்பராக்கு
அன்பைப் பொன்னாலும் பூவாலும் வாங்கமுடியாது
அன்பை அன்பால் வளர்க்க முடியும்.
அன்பின் அறிகுறி புன்னகை
அன்புடையாரைப் போற்றி வாழ்க
அன்புடையாரை என்றும் நம்பு.
அன்புடையார் அறிவுரை கேள்
அன்புடையார் சூழ இரு
அதிவல்லமை உள்ளவன் தன்பேச்சில் மிக
அடக்கமாக இருப்பான் ஆனால் செயலில் மீறுவான்.
அபாரதிறமை ஒரு பகுதி
உள்ளுணர்வு நான்கு பகுதி
வியர்வை சிந்துதல் நாற்பது பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபாரதிறமை என்பது சிரமப்படுவதற்கு
அளவுகடந்த தகுதி
அபிப்பிராயங்களைச் சந்தேகிக்கலாம் ஆனால்
நல்லவை நல்லதே
அபிப்பிராயங்கள் புதியனவாயின் ஏற்பது கடினம்
அவதிப்படுபவனுக்கு நேரம் விரைவாகச் செல்லும்
அகத்தின் ஆரோக்கியம் முகத்தில் தெரியும்.
ஆக்கப் பொறு, ஆறப்பொறு
ஆக்கப் பொறுக்காதவர், ஆறப்பொறுப்பாரா?
ஆவலுடையாருக்கு தூரம் மிகுதி.
ஆணவம் பேசுபவர் விரைவில் வீழ்வார்.
ஆணவம் அடக்கமுடையாருக்கு இல்லை.
ஆணவம் அழிவுக்கு அறிகுறி.
ஆணவம் பேசுவது வீணுக்கு கேடுதேடுவது.
ஆணவம் தோல்வியின் கொம்பு.
ஆணவம் அறிவைத் திரையிட்டு மறைத்துவிடும்.
ஆணும் பெண்ணும் இறைவனின் படைப்பு.
ஆசிரியனையும் ஆசானையும் அவனியில் உயரவை.

ஆரோக்கிய சிந்தனை உடையவன் ஒவ்வொரு தடை ஏற்படும் சந்தர்ப்பங்களிலும் அதில் ஓர் நன்மையை இனம் காணுவான். பலவீன சிந்தனை உடையவன் ஒவ்வொரு நற் சந்தர்ப்பங்களிலும் அதில் ஓர் சோகநிகழ்ச்சி மறைந்திருப்பதை எண்ணிக் கவலை அடைவான்.

ஆற்றுத் தண்ணீர் கல்லைத் தேய்ப்பது போன்று விடா முயற்சியால் எதையும் சாதிக்கமுடியும்.

ஆறுதலில்லாமல் தொடர்ந்து வேலை செய்தால் வேலையின் தரமும் குறையலாம், விபத்தும் ஏற்படலாம்.

ஆலயப்பணி ஆண்டவன் பணி.
ஆலயமணி ஓசை ஆண்டவன் ஓசை
ஆதிமூலம் ஈசனின் இதயம்.
ஆற்றல் உள்ளவள் சேற்றிலும் மிதப்பான்,
ஆற்றல் உள்ளவன் வீரம் பேசான்.
ஆறு கல்லைத் தேய்ப்பது போல் என்றும் முயன்றால் வெல்லலாம்,
ஆற்றல் விடா முயற்சியின் பெறுபேறு.
ஆற்றில் விதைத்தாலும் கணக்கிட்டு விதை.



ஆற்றில் குதிக்குமுன் ஆழத்தை அறி
ஆபாச சிந்தனைக்கு இடங்கொடேல்.
ஆயிரம் பொன் போனாலும் வாய்மை தவறேல்.
ஆயிரம் பொன் கொடுத்தும் அறிவைத் தேடு.
ஆயிரம் நன்மை கிடைக்கினும் ஆண்மை தவறேல்.
ஆலும் விழுதும் அதன் இனத்தின் குணம்.
ஆண்டுக் கொருமுறை ஞாயிறு சுற்றி வந்திடுவோம்.
ஆகாயத்தில் ஞாயிரைப் பார்த்து என்றும் வணங்கு.
ஆகாரம் அளவுடன் உண்.
ஆறு காலமும் சிவநாமம் செபி.
இல்லறம் இறைவனின் திருமலர்
இனிய இல்லற வாழ்வு இறைவனுக்கு பொன்மலர்மாலை
இறைவனின் விருப்பம் இயற்கையின் நியதி
இயற்கைக்கு மாறானது இறைவனுக்குமாறானது
இயற்கையே இறைவன் இறைவனே இயற்கை
இறைவன் இல்லா இடமே இல்லை.
இறைவனின் அடிதெரியாது
இறைவனின் முடிதெரியாது
இறைவனுக்கு அருவமில்லை உருவமில்லை
இறைவனுக்கு ஆதியில்லை அந்தமில்லை
இறைவனுக்கு ஆயிரமாயிரம் பெயர்கள்
இறைவனே எல்லாம்
இன்று செய்யக்கூடியவற்றை நாளைசெய்யலாம் என்று பிற்போடவேண்டாம்
இன்று இறைவனை எவ்வளவு வணங்கமுடியுமோ அவ்வளவிற்கு வணங்கு
இன்றுள்ளவற்றைக் கவனி நாளை தன்னைத்தானே கவனிக்கும்
இன்றுள்ள நிலைமையை நன்றாக அறிவாயாயின் நாளையதை நன்கு அறிவாய்.
இயற்கை விசையின் இசைவால் உலகம் உருண்டையானது
இடையூறுகளில் இருந்து தப்புவதற்கு வழி
அவற்றை எதிர்த்து நின்று வெல்வதுதான்.
ஈசனை நினையாநேரம் நிறைவற்ற நேரம்
ஈசன் திருவருள் எவர்க்கும் உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசன் அனுசரணையின்றி அணுவும் அசையாது.
ஈசன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்
ஈசன் புல்லிலும் இருப்பான் கல்லிலும் இருப்பான்
ஈசன் தண்டிக்கமாட்டான்
ஈசன் மன்னிக்கவும் மாட்டான்
ஈசன் என்றும் காப்பான்
ஈசன் நியதிமீறுதே
ஈசன் நியதி மீறினுல்த் துன்பம் தொடரும்
ஈசன் இருளைப் போக்குவான்
ஈசன் அருளை அள்ளித்தருவான்
ஈசன் எம்மை என்றும் கைவிடமாட்டான்
ஈகை ஈசனுக்கு இனியது
ஈகை நல்லது என்றும் நல்லது
உபகதையில் உன் நேரத்தை விரையம் செய்யாதே
உவமைக் கதைகளைப் படித்து உன் தகமைகளை வளர்
உலகம் காப்பவர் ஈசன்
உலகமெல்லாம் ஈசனை வணங்கிடுவார்.
உலகமெல்லாம் ஈசன் திருநாமம் செபித்திடுவார். ஆயிரம் பெயர்கள் ஆயிரம் மொழிகள்.

உலகமெல்லாம் சிவசக்தி மயமே.
உலகிலும் பிரபஞ்சத்திலும் உள்ள ஒவ்வொரு அணுவுக்கும் சக்தியுண்டு.

உணவின் திறன் மறுநாள் தெரியும்.
உண்ணும் போதும் உறங்கும் போதும் ஈசனை வணங்கு.
உண்மை பேசினுல் நன்மையுண்டு.
உண்மை உடையவனுயில் கண்ணியம் தேடிவரும்.
உண்டது முற்றும் ஜீரணித்தபின் உண்.
உண்ணுமல் உடுக்காமல் பொருளைச் சேர்க்காதே.
உணவின் குணமறிந்துண்.
உன்னை நீ அடக்கி ஆள்.
உன்னை நீ உணர்ந்தறி.
உள்ளதை உள்ளபடியே பேசு.
உவமை சொல்லி விளக்கிடு.
உன்னைப் புகழ்ந்து பேசிடாதே.
உன்னை இகழ்ந்து பேசிடாதே.
உள்ளத்தில் உள்ள அன்பை மறையாதே.
உன்னை நீ அறிந்து செயல்படு.



உலகில் முதல் அடி எவ்வாறு அமைகிறதோ அதில் மிகுதி நாட்கள் தங்கியிருக்கிறது.
உலகம் ஆரம்பமான காலந்தொட்டு மாற்றங்கள் நடந்த வண்ணம் இருக்கின்றன. ஆகவே மாற்றத்தை வெறுக்காதே.
உலகில் உள்ள முக்கியவளம் மனித வளமாகும்.
உலகம் பிறந்தது ஒருநாளில் இல்லை.
உலகெங்கும் ஓடித்திரிவோருக்கு ஊர் வழக்குத் தெரியாது.
உண்மையான கை சோர்வதில்லை, கண் களைப்பதில்லை, மனம் தளர்வதில்லை, உள்ளம் உறங்குவதில்லை, உழைப்பே அவன் உயிர்.

ஊக்க முடையாருக்கு வெற்றி கிட்டும்.
ஊக்கமும் ஆக்கமும் அவர் அவர் விருப்பம்போல் அமையும்.
ஊருக்கும் உலகுக்கும் உழைப்பார் உத்தமர்.
ஊர் என்று உலகத்தைப் போற்றி வாழ்.
ஊரில் யாவரும் உறவினரே.
ஊரில் ஒருவரின் இன்பத்தை எவரும் மகிழ்ந்திடுவர்.
ஊரில் ஒருவரின் துன்பத்தை எவரும் பகிர்ந்திடுவர்.
ஊரில் உள்ள அத்தனைபேரும் ஒரு பெரிய பண்புமிகு அன்புமிகு குடும்பம்
ஊரைத் தெரிந்தால் உலகைத் தெரியும்
ஊரைப்பேணு உலகம் உன்னைப் பேணும்
ஊரைப்போற்று உலகம் உன்னைப் போற்றும்
ஊக்கமுடையோருக்கும் திறமை உடையோருக்கும் எவற்றிலும் சித்திகிட்டும்
ஊரை ஆள்வதிலும் தன்னை ஆள்வது கடினம்
ஊரை ஆளலாம் உள்ளத்தை ஆளமுடியாது
ஊரோடு உறவாடு
எல்லாம் வல்ல இறைவன் எவரையும் கைவிடமாட்டார்
எக்கருமமும் ஆரம்பம் மிகச்சிறியதாகும்
எதிர்காலத்தை எண்ணுதே எண்ணுவதற்குமுன்வந்து விடும்
எதிர்காலத்தைப் புகழாதே இன்று என்ன நடக்குமோ தெரியாது
எவ்வழி நல்வழி அவ்வழி துணிந்து செல்
எவ்வளவு கடினமான வேலை எனினும் வீரம்பேசாமல் செயலில் ஈடுபடு
எல்லாம் அவன் திருவருள்
எல்லாம் அவன் திருநாமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் அவன் செயல்

எல்லாம் அவன் திருவுருவம்

ஏர்சீரில்லாது போனால் உழவில் தெரியும்

ஏலாதது எதுவாகினும் அது அவனின் விருப்பம்

ஏமாற்றம் ஏற்படுவதும் அவன் செயல்

ஒவ்வொரு அணுவிலும் அவனிருப்பான்

ஒவ்வொரு நாளையும் இறுதி நாள் என்று எண்ணி இறைவனிடம் உன்னை முற்றாகச் சமர்ப்பணம் செய்

ஒழுக்கமில்லாருக்கு என்றும் இழுக்கு

ஒழுக்கமில்லான் இருட்டில் விளக்கு இலான்போல

ஒழுக்கம் உன்னை உயர்த்திடும்

ஒவ்வொரு நல்ல முயற்சியும் படிப்படியாக முன்னேறவேண்டும். இடையில் கேலி எதிர்ப்பு பின்புதான் ஏற்பு (Acceptance)

ஒன்றையும் செய்யத்துணியாதவன் எதையும் செய்து முடிக்க முடியாது

ஒவ்வொரு ஜீவனுக்கும் உணவு கிடைக்கும் ஆனால் உணவு தானாக ஜிவனின் வதிவிடம் தேடிவராது

ஒவ்வொரு அணுவும் சிவனும் சக்தியுமே

ஓய்வில்லைச் சிவனுக்கும் சக்திக்கும்

கற்பனைக் கதையை நம்பி கனவில் நில்லாதே

அறிஞர்களின் உவமைக் கதைகளைப் படித்து உன் தகமைகளை வளர்

நிஜ நிகழ்ச்சிச் சம்பவம் கற்பனைக் கதையை வெல்ல வல்லது

மொழி பல கல் தொழில் நுட்பம் பயில்

ஐயன் இருக்கையில் ஐயப்படவேண்டாம்

முயற்சி எதையும் வெல்லும்

சிறந்த தகமை உடையோராயின் விடா முயற்சி அத்தகமையை மேலும் மேம்படுத்தவல்லது. சாதாரண தகமை உடையோரையும் முயற்சி சிறந்த தகமை உடையோனாக்கும்.

கறை பிடித்து அழிவதிலும் உபயோகித்து அழிவது நன்று.

வல்லமை உடையோர் தங்களுடைய உள்ளுணர்வுகளை இனிய பண்பான சொற்களாலும், உறுதியான செயலாலும் காட்டுவார்கள். ஆவேசப்படவும் மாட்டார்கள். அச்சமடையவும் மாட்டார்கள்.

முதல் வேலை பின்பு ஆறுதல்.



மேன்மையற்ற சுகவழித் தத்துவங்களைப் பயிற்றாதீர்கள். ஆனால் மேன்மை நிரம்பிய நேர்வழித் தத்துவங்களைப் பயிற்றுவீர்களாக.

கணிசமற்ற சிறுசிறு செயல்கள் ஒன்று சேர்ந்தால் ஓர் பூரண பெறுபேறு உண்டாகும். ஓர் பூரண பெறுபேறு ஓர் கணிசமற்ற செயல் அல்ல.

வித்தை கற்கும் பொழுது எது? ஏன்? எங்கே? எதற்கு? எப்படி? எனப் பல கேள்விகளை எழுப்பி அவற்றிற்கு விளக்கம் தெரிந்துகொள்.

தேவை ஏற்படும்போது மூளை வரும்.

தேவை வழியைத் தேடும்.

வேண்டுவோருக்கு வேண்டியது கிட்டும்.

கிட்ட இல்லாவிடில் எட்டப் போய்விடும்.

கிட்டாதாயினும் எட்டாதாயினும் மாற்று வழியும் முறையும் காண்

நேரம் பொன்னானது

நேரம் அருமையானது

நேரம் பாய்ந்து செல்கிறது

நேரம் போனால்த்திரும்பாது

நேரம் பறக்கிறது

நேரம் பின்னோக்கு வதில்லை

நேரம் உறங்குவதில்லை

நேரம் இலவசம் இல்லை

நேரம் தவறுவதில்லை

நேரமே பணம் பொருள்

நேரம் எக்காலமும் பொறுத்து நிற்காது

நேரம் விரையமாகில் வாழ்நாள் வீண்போகும்

நேரம் வாழ்விற்கு நீர்

நேரத்தைதடுக்கமுடியாது

கடன்கொடுத்து நண்பனை இளக்காதீர்

சோம்பலாக இருப்பவனுக்கு நேரம் தாமதிப்பது போல் தோன்றும்

விருந்தை விரும்பாதே தானம் கொடு

கடன் கொடாதே தர்மம் கொடு

பல பயிரைப் பாத்தியில் வையாதே.

பலபேரை வேலைக்கு வையாதே.

பசளைக்கேற்ற விளைச்சல்.

தேவைக்கு மிகுதியானோர் சேர்ந்து செய்யும் வேலை நேர்த்தியாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாச முள்ளவனை வேலைக்கு அமர்த்து
மாற்றானை வேலைக்கு வையாதே.
மாற்றானை வெறுக்காதே
மாற்றானுக்கு இரகசியம் சொல்லாதே
மாற்றானை நம்பாதே
மாற்றானுடன் உறவு கொள்ளாதே
மாற்றானுக்கு மனங்கனியப் பேசு
மாற்றானுக்கு அன்பு காட்டு
மாற்றானின் மனதை மாற்று
மற்றவன் பொருளை என்றும் எண்ணாதே
காடு வெட்டிப் பயிர் செய்
மற்றவன் மண்ணை விரும்பாதே
நிலத்தை உழுது பண்படுத்து
தானியந் தேடிவை
விதை நெல் பேணிவை
தகுந்த நேரத்தில் உழு
களை பிடுங்கிப் பயிர் செய்
நல்லறவாழ்வு இறைவனுக்கு பொன்மலர் மாலை
நோய்க்கு நல்ல மருந்து நோயை மாற்றவல்ல சுத்த மூலிகையுணவும் பானமும்

வாழ்வை எவ்வளவு சுருக்கமாகவும் சுலபமாகவும் அமைக்க முடியுமோ அவ்வளவிற்கு ஆக்கு

காற்றுள்ள நேரம் எல்லாம் தூற்ற முடியாது
தூற்றவேண்டிய நேரமெல்லாம் காற்று வீசுவதில்லை

தேடிச் சென்றால் கிடையாது தேடாவிட்டால் காலில் தட்டும்

வேலையில்லா மனிதன் மனதில் பெரும்குழப்பமும்
ஆவேசமும் உள்ளவனாக இருப்பான்
சகமனிதர்களுடன் சேர்ந்து அவர்கள் குறிப்பு
அறிந்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யின்
ஒருமித்த முயற்சியால் அரிய பெரிய சாதனைகளை நிறைவேற்ற முடியும்

முயற்சி உடையாருக்கு என்றும் சுவர்க்கம்
சோம்பேறிக்குச் சுமையில்லை

விருப்பங்கள் எல்லாம் நிறைவேறுமானால் வேலைக்கு மதிப்பு இல்லை. இறைவனை வேண்ட ஆள் இல்லை

தன் தகமை அறிந்து தன்திசை நோக்கு
செயல்படாதவனுக்கு இறைவன் உதவி செய்ய மாட்டான்



வெற்றிப் பாதையில் நிற்கும்பொழுது பேரின்பம் வெற்றி கிடைத்தால் நிறைவு

பொருளைத்தேடும்போது இன்பம் பொருளைச் சேர்த்தபின்பு பொறுப்பு மிகுதி

நகலைப்பார்த்து அசல் என்று எண்ணாதே நகல் நகல்தான் அசல் அசல்தான்

சிலருக்கு சில நன்மைகள் தற்செயலாகக் கிடைக்கும் ஆனால் தனது உழைப்பால் கிடைக்கும் நன்மைகள் மேன்மைக்குரியது

மனிதனுக்கு நீண்டகால நல்ல இலட்சிய இலக்கு இருக்க வேண்டும். அதனை நோக்கி எத்தனை இடையூறு ஏற்படினும் தன்னிலும் இறைவனிலும் நம்பிக்கை வைத்து முழுமூச்சுடன் செயல்ப்பட வேண்டும்

பல இடர்களை சந்தித்திருக்கலாம். சில எதிர்பாராத சித்தியும் கிடைத்திருக்கலாம். ஆனால் முயற்சியால் வென்றகனி இனியது

மிகக் கடினமான வேலை எதுவாகினும் வீரம் பேசாமல் செயலில் ஈடுபடு

விதியும் காலமும் பலவீனமாக்கலாம். ஆனால் உறுதி உண்டேல் உழைப்பால் எதையும் வெல்லலாம்

பெரும் விடா முயற்சியும் இடையிடையே சலிக்காமல் தொடர்ந்து சிரமத்தின் மத்தியில் தனித்து நின்று வியர்வை சிந்தி உழைப்பவனே வெற்றிக்குரியவனாவான்

துணிவும் திறமையுமுள்ளவன் விதியை மதியால் வெல்லும் முயற்சியில் அடக்கமாகவும் பண்புடனும் ஈடுபடுவான்

சொல்லாமல்ச் செய்வான். வீரம் பேசான். செயலே அவன் மூச்சு, பேச்சு

பொறுமையுடனும் உறுதியுடனும் செயல்ப் படுபவன் இறுதியில் வெற்றி அடைவான்

கணக்கிட்டுச் செய்யவேண்டிய வேலையை சந்தர்ப்பத்திற்கு விடாதே

இடையூறுகளில் இருந்து தப்புவதற்கு வழி அவற்றை எதிர்த்து நின்று வெல்வதுதான்

மனிதனின் ஒரு சிறு தீயபழக்கம் ஆழ்கடல் கப்பலின் ஒழுக்குப் போன்றதாகும்

நிஜ உலகு சிறந்த இல்ட்சியமுள்ளது அல்ல

பலதையும் பத்தையும் அறிய ஆவல் உள்ளவன் விவேகி ஆகிறான்

தன்னைத்தான் எப்படி எண்ணுகிறானோ அப்படியே அவன் ஆகிவிடுகிறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டப்பார்க்க சரியாகத் தோன்றும் கிட்டப் பார்க்க
பிழைகள் தோன்றும்

வாழ்வில் வெற்றியை ஈட்டி நிற்பவன்
நிஜத்தின் சிக்கலில் பிடிபட்டுள்ளான்
வாழ்வில்த் தோல்வியில் நிற்பவன் கனவுல
கில் பறந்து கொண்டிருக்கிறான்
கற்பனைக் கதையை நம்பி கனவுலகில் நில்லாதே
பொருளுக்கோ பதவிக்கோ உன் நற்கொள்கைகளை
கைவிடாதே

எதை ஆவலுடன் விரும்புகிறோமோ அவற்றை
நம்புகின்றோம்

தர்க்கம் உண்மையில்லை உண்மை மட்டுந்தான் உண்மை
செழிப்பாய் வளரும் பயிரெல்லாம் விளைவு தருவதில்லை
சேமிப்பு இல்லையேல் வளர்ச்சியில்லை
நல்லோருக்கும் தீயோருக்கும் பகலவனின்
ஒளி உண்டு. வானில்மழை உண்டு
வெற்றிதான் சரிபிழையின் உலகநீதிபதி

கலந்தாலோசித்தல் விளக்கத்தை மேம்படுத்துகிறது
தனிமை மேதையை வளர்க்கிறது

தனிமையில் நிற்பவன் மன உறுதி அடைகிறான்
தன்னில்த்தான் தங்கியிருக்கப் பழகின்றான்
தனியாக நடப்போன் விரைவாக நடக்கின்றான்
வல்லமை உள்ளவன் தனித்து நிற்பான்.

புதிய கருத்தை புதிய சொல்லைக் கேட்டு அஞ்சுவார்கள்
பின்பு நம்புவார்கள், போற்றுவார்கள், பேணுவார்கள்.

அபிப்பிராயங்களைச் சந்தேகிக்கலாம். ஆனால் நல்லவை
நல்லதே

அபிப்பிராயங்கள் புதியனவாயின் ஏற்பது கடினம்
மாற்றங்கள் நல்லனவாயின் அதை விரும்பு

விளைச்சலை அதிகரிக்க வேண்டுமானால் அதில் வெற்றி
அடைந்தவனைப் பின்பற்று

தாவரபோசணம் விரும்பி உண்

மதுவை எண்ணுபவன் முடிவைத் தேடிக்கொள்கிறான்

சூது வெறு, வாது தவிர்

வாழ்வில் உயர்ந்தது தன்பொருள் பேணுதல், தன் தொழில்
தெய்வம் எனப் பேணுதல், தன் மனை நிற்றல், புகைப்
பிடிக்காமை, மது தொடாமை, சத்தியம் தவறாமை,
கொல்லாமை, புலால் உண்ணாமை, உற்றாருக்கு உதவுதல்,
ஊராருக்கு உதவுவது, உத்தமனாவது.

சிறந்த மனிதன் தனது பிழைகளை மன்னிக்கவே மாட்டான்.
சாதாரண மனிதன் தனது பிழைகளை மன்னிப்பான்



தன் மனை நில். தன்மனை திருக்கோயில்
தன் அகம் தெய்வீக வாசஸ்தலம்
தன்னில்லம் புனித சிந்தனை செய்யும் பிறப்பிடம்
தன்வீடு சிறந்த தர்மபீடம்

பெரியோராயினும் முதியோராயினும் அவர்களது அறிவுரை
நல்லதாயின் அவ்வழி நட

மனிதன் தன்னுடைய விதியைத் தானே திட்டம்
போட்டுக் கட்டி அமைக்கிறான்.

மனிதன் தான் விரும்புவதுபோல் வளர்கிறான்
விருப்பம்போல் அமைகிறது ஆகவே விருப்பங்கள்
இலட்சியமான தரம்மிக்கனவாக இருக்கவேண்டும்
கடின உழைப்பாளி, வழக்கமாக நேர்மையாக இருப்பான்
விடாமுயற்சி அவனை இலட்சியவாதி ஆக்கிவிடும்
சிரமம் எடுக்காவிடில் ஆதாயம் இல்லை
வியர்வை இல்லை என்றால் இன்பம் இல்லை
நான்கு நேரம் உணவு அருந்துவோருக்கு
நாற்பது வயது மூன்று நேரம் அறுவதுவயது இரண்டு
நேரம் எண்பது வயது, ஒருநேரம் நூறுவயது

வேலை அதிகம் செய்யும்பொழுது மனதிற்கு ஆறுதல் உண்டு
வேலை குறைவான நேரங்களில் மனதிற்கு வேதனை உண்டு
மனிதர் ஏன் பிறக்கவேண்டும் பின் ஏன் இறக்கவேண்டும்
என்று சிந்தி.

வேலையைச் செய். மிகுதி இறைவனின் செயல்
வேலை இல்லாதோருக்கு வேலி இல்லை
வேலையைச் செய் கூலி கிடைக்கும்.
வேலை செய்தோருக்கு வேதனம் தேடிவரும்
வேலைக்கு விரை சோலிக்குப் போகாதே
தாமதத்தால் நேரத்தை விரயம் ஆக்காதே

மேதைகளினது வாழ்க்கை வரலாறுகளைப் படித்து
அனுகூல அறிவைப் பெருக்கு

சிலருக்கு கனவில் வாழ்க்கை செழிப்பானதாக இருக்கும்
விழித் தெழுந்து பார்த்தால் கொடுமையும் கடமையும்
நிறைந்ததாக இருக்கும்

மறுசிலருக்கு கனவில் கொடுமையானதாகவும் கடமையான
தாகவும் இருக்கும், விழித்தெழுந்து பார்த்தால் செழிப்
பானதாகும்

சிக்கல் நிறைந்த வேலை என்று தப்பிப் போகமுடியாது.
நிமிர்ந்து நின்று செயல்பட வேண்டும். அல்லது அதில்த்
தோல்வி அடைய வேண்டிவரும். ஆகவே இப்பொழுதே செய்
வேலைகளைத் தள்ளிப் போடுவதால் அவற்றில் இருந்து
தவறிப்போக முடியாது

தாமதம் செய்வதால் வேலைகள் இலகுவாகப் போவது இல்லை
வீட்டில் உள்ள நான்கு மரம் காட்டில் உள்ள நாலாயிரம்
மரத்திற்குச் சமன்

வாழ்வின் இலக்கு மகிழ்ச்சியாகவோ, கவலையாகவோ, இருக்கக்கூடாது. இறைவனின் திருஅருளாக இருக்கவேண்டும்
நன்றாகத் தொடங்கினால் அரைப்பங்கு முடிந்ததிற்குச் சமன்
தீயதைச் செய்யாதே. தீயதைப் பாராதே. தீயதை எண்ணாதே, தீயதை வெறு. இறைவன் உன்னுள் இருக்க இடங்கொடு.

நடந்து முடிந்ததை இறைவனாலும் மாற்ற முடியாது
பிழையான செயலுக்கு மன்னிப்புக் கேட்பதிலும் பார்க்க வருங்காலத்தில் சரியான சிறந்த செயல் செய்வது உகந்தது.
கரடனைக் கதை கதாசிரியரின் சிந்தனைக்கு உட்பட்டது.
நிஜசம்பவங்கள் இறைவனின் சக்திக்குட்பட்டது.

தொடக்கம் முதல் கவனிக்க வேண்டும் மிகுதி தன்னைத் தானே கவனித்துக் கொள்ளும்

பெரிய முயற்சியாயின் ஆரம்பம் முதல் கவனிக்க வேண்டும்
மிக உச்சியை அடைய விரும்பினால் மிக அடித்தளத்தில் இருந்துதான் தொடங்கவேண்டும்

மலைமீது ஏறும்போது முதல் ஒரு அடி வைத்துத்தான் தொடங்கவேண்டும்

கவலை மிக்கது எதுவாயின் செய்த வேலையைக் குறையுடன் விடுவது

பூரண பெறு பேறு காலத்தால் ஆன குழந்தை
பூரணத்துவம் கிட்டுவதற்கு காலத்தின் அலகுகள் தேவை
விளைச்சலில் ஏமாற்றம் அடைந்தால் நிலத்தைக் குறை கூறலாகாது

மன்னிப்புக்கோரி நிற்போர் குற்றத்தை ஒப்புக் கொண்டவர் ஆவர்

பிரச்சனைகள் சிறுபயிரைப்போன்று கவனம் எடுத்து வளர்த்தால் பெரிதாகும்.

மனிதர்கள் இறைவனின் பிரதிபலிப்பே
மனிதரை மதிக்காதவர் இறைவனை வெறுக்கிறார்
மனிதரை போற்றுவது இறைவனை போற்றுவதாகும்
மனித வளத்தின் முக்கிய வளம் அறிவு. நிறைவு

தொகுத்துச் சொல்லியவர்
கலாநிதி வெற்றிவேல் திருஞானசம்பந்தர்

எழுதியவர்கள்:
செல்வன் திருஞானசம்பந்தர் திருக்குமரன்
செல்வி திருஞானசம்பந்தர் திருக்குமரிகை

சீர்பார்த்தவர்:
திருமதி திருஞானசம்பந்தர் மனோன்மணி

நல்லூரின் அயலூர் நற்றவப்பதி நாவற்குழியூர் வாழ்ந்த

சைவப் பெரியார்

# முத்தையா வெற்றிவேல் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

உசன் எனும் உத்தமர்கள் உகந்து வாழும் நற்றவப் பதியில் உழுதுண்டு வாழும் உயர் தொழில் செய்து பல்லாண்டாய்த் தொழுதுண்டு பின்செல்லாது உயர் வாழ்க்கை வாழ்ந்த திருத்தவ நம்பி சின்னத்தம்பி முத்தையா அவர்களும் அவரது தர்மபத்தினி தெய்வானைப்பிள்ளை அவர்களும் செய்த தவப் பயனால் 1885ம் ஆண்டு அவனியில் வெற்றிவேல் அவர்கள் அவதரித்தார்.

அவருக்கு முன்பிறந்த அருமைத் தமையனார் வைத்திலிங்கம் [1883 — 1956] பின் பிறந்த அருமைத் தம்பிமார் செல்லையா [1887 — 1948] கந்தையா [1896 — 1980] ஆவார்கள். இந்நான்கு சகோதரர்களும் இளமைப் பிராயத்தில் இருந்தே தேக ஆரோக்கியம் உடையவர்களாகவும், விவேகிகளாகவும், விளையாட்டு வீரர்களாகவும். கல்வியைக் கசடறக் கற்றவர்களாகவும் விளங்கினார்கள். இவர்கள் இளமைப் பிராயத்திலேயே ஔவையின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி முதலியவற்றையும் திருக்குறள், நிகண்டு, புராணங்கள் முதலியவற்றையும் நன்கு பயின்று திருத்தலங்களிலும் கல்விக் கூடங்களிலும், வீட்டிலும், பற்பல அவைகளில் பாட்டும் பயனும் சொல்லிப் பெயரும், புகழும் பெற்றனர். இவர்கள் நல்லொழுக்கத்தாலும் நற்பண்புகளாலும் சைவ சீலர்களாக வாழ்ந்தமையாலும் இவர்கள் ஒருவர்க்கொருவர் ஐக்கியமாகவும், துணையாகவும் அன்பாகவும் இருந்தமையால் தசரத சக்கரவர்த்திக்கு இராம, இலக்குமண பரத, சத்துருக்கன் போன்று நான்கு ஆண்மை மிக்க வீரர்களாக, உசன் வாழ் சைவப் பெரியார் சின்னத்தம்பி முத்தையா அவர்களுக்கு அமைந்தார்கள்.

இரண்டாவது மைந்தனான வெற்றிவேல் அவர்கள் அடக்கமுடையவராகவும் பொறுமை உள்ளவராகவும் சைவ சீலராகவும் விளங்கினார். இவரை பெற்றோர் இரண்டாவது மைந்தன் என்ற காரணத்தால் அன்புடனும் ஆசையுடனும் ''சின்னத்தம்பி! சின்னத்தம்பி'' என்று அழைத்தனர். இவரது தந்தை தனது ஊராகிய உசனில் பெரிய பண்ணையும் தென்னந் தோட்டங்களும், பனந்தோப்புக்களும், மாந்தோப்புக்களும், நெல்வயல்களும் உடையவராய் இருந்தார். இவரது உற்றார், உறவினர், நண்பர்கள் அவருடைய வீட்டிற்கு உறவாட வரும்போதெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் செல்லமாக அழைத்த "சின்னத்தம்பி" என்ற பெயரை அவர்களும் "சின்னத்தம்பி" என்று அன்பாகவும் செல்லமாகவும் அழைத்து வந்தமையால் பலரும் அவ்வன்பைப் போற்றிப் பேணி "சின்னத்தம்பி சின்னத்தம்பி" என்று பல முறை அன்பு ததும்ப அழைத்தனர். இவர் சின்னத்தம்பி என்றால் சிறிய ஆள் அல்ல. பெரிய பலவான், உயர்ந்து வளர்ந்தவர். பல்கலைகள் கற்றவர். கற்று அவ்வழி நடப்பவர், சிவபக்தர், சிவதர்மசீலர், சிவநெறியாளர், வீரவெற்றி வேல் கொண்டு சூரசங்காரம் செய்த திருநாமம் தரித்தவர். அந்தப் பக்தி மிகுதியால் அப்பெயரே அவர் பெயரும் வெற்றிவேல்.

ஈர் பன்னிரண்டு வயது வந்திட ஒழுக்கமும் உயர்பண்பும், தெய்வபக்தியும் நிறைந்து, நிமிர்ந்த மேனியும் பொலிந்த முகமும், பூரித்த உள்ளமும், நிலத்தினில் யாருக்கும் அஞ்சிடா நெஞ்சமும் எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கும் திண்ணிய ஆற்றலும், திருவும் தீரமும், வீரமும், வெற்றியும், பலரின் அன்பும், நட்பும், ஆசிகளும் பெற்ற வெற்றிவேல் அவர்களைத் திருமண மணாளனாக்கிப் பெருவிழா எடுத்தனர். அந்தணர் வேதமோத உற்றார் உறவினர் பலரும் வாழ்த்துக்கூற நாவற்குழி வாழ் மாமன், மாமி மகளைத் திருமணம் செய்து கொண்டார்.

திருமண மங்கையானவர் உழுதுண்டு வாழும் உயர்தொழில் செய்து பல்லாண்டாய்த் தொழுதுண்டு பின்செல்லாது உயர் வாழ்க்கை வாழ்ந்த திருத்தவநம்பி விஸ்வநாதர் ஆறுமுகமும் திருத்தவச் செல்வச் சீமாட்டி சின்னப்பிள்ளை நல்லாழும் செய்த தவத்தால் பெற்றெடுத்த பேரழகும், நற்பண்பும், கல்வியும், அடக்கமும் உடைய செல்வச் "சின்னம்மா" அவரைத் திருமணம் செய்து நாவற்குழியில் இல்லற வாழ்க்கையை வீரநடை போட்டு திருவள்ளுவர் திருவாக்குப்போல் இல்லறத்து நல்லற அரசு நடத்தினர். தர்மபத்தினி விஸ்வநாதன் பௌத்திரி, ஆறுமுகம் புத்திரி சின்னம்மா துணை இருக்க, நாவலர் பலர் நயந்தோங்கும் நாவற்குழியில் இல்லற வாழ்வே இனிதென வாழ்ந்து வந்தனர்.

வெற்றிவேல் அவர்கள் சிவனின் திருநாமம் எல்லா நேரங்களிலும் உச்சரிப்பர் உணவருந்துமுன் ஸ்நானம் செய்து பராசக்தி வடிவமான திருநீற்றை கலா மந்திரங்களால் சுத்திசெய்து சிவசூரிய நமஸ்காரமும் செய்து சிவமந்திரம் உச்சரித்து அநுட்டானமும் செய்வர். அருளும் தேடினார், பொருளும் தேடினார். விவசாய மன்னனாகப் பல ஆண்டுகள் தொடர்ந்து பரிசுகள்



பெற்றார். நிலங்கள் வாங்கித் திருத்திப் பயிர் செய்தார். இவர்களுக்கு ஒன்பது பிள்ளைகள் அவதரித்தனர். சிலர் இளம் பிராயத்திலேயே மறைந்து விட்டனர். ஆயினும் நான்கு நல்ல பிள்ளைகள் பொன்னம்பலம் (1917 – 1986) சரஸ்வதி, குமாரசாமி (1924–1985) திருஞானசம்பந்தர் ஆகியோரைப் பேணி அன்பாக வளர்த்து வந்தனர். பிள்ளைகளும் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என மதித்து அவர்கள் சொற்கேட்டு சைவசீலர்களாகவும் சைவநெறி தவறாது பண்புள்ளவர்களாகவும் அடக்கமுடையவராகவும் வளர்ந்து வந்தனர்.

மருமக்கள்: சிதம்பரப்பிள்ளை, இரத்தினேஸ்வரி, சின்னத்தங்கச்சி மனோன்மணி

பேரப்பிள்ளைகள்: திலகநாதன், தில்லைநடேசன், திலகவதி மனோகரன், சிவகுமார், கமலகுமார், சபேஸ்குமார், குமாரிகா, திருக்குமரன், திருக்குமரிகை

பேர மருமக்கள்: மீனாம்பிகை, சிவசாந்தி, கணேஷானந்தன்
பூட்டப்பிள்ளைகள்: திலாணி, திலீபன், திசாந், திலக்ஷி சசிவன், வஜீவன், தனுஷா.

சைவப்பெரியார் வெற்றிவேல் அவர்கள் சரியை கிரியை யோக நிலைக்கு அப்பால் சென்று ஞானநிலை நின்று அந்நிலையில் பேரின்ப பெருவாழ்வு வாழ்ந்தார், 1953 ஆம் ஆண்டு இறைவன் திருவடி சேர்ந்தார்.

சைவப்பெரியார் வெற்றிவேல் அவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தெய்வத்திருவாய் மலர்ந்து நல்லறிவுரைகளையும் சிந்தனை வித்துக்களையும் தத்துவ நெறிகளையும் இயற்கை நியதிகளையும் அருளியுள்ளார்.

பொதுவாக அவரின் இளையமகன் அவற்றை அவதானமாகக் கேட்டு அச்சிந்தனைகளை மூலமந்திரமாக மதித்து அவ்வழி நல்வழி "தந்தை சொல் மிக்கதோர் மந்திரமில்லை" என எண்ணி அவ்வழி நடந்தார். அது தமக்கு மட்டுமில்லாமல் தமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய எல்லோருக்கும் ஆலோசகராக, வழிகாட்டியாக, உற்ற நண்பனாக உதவுமென விசுவாசத்துடன் தம்பி அவற்றை "சைவப்பெரியார் முத்தையா வெற்றிவேல் அவர்களின் சிந்தனையும் அவற்றைத் தழுவிய மணிவார்த்தைகளும்" என்ற தலைப்பில் தந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேவஸ்தான வெளித் தோற்றம்

சித்திவிநாயகர் தேவஸ்தான நிர்வாகசபை

**திருவாளர் க. அன்னலிங்கம் அவர்கள்**

அன்புடன் வழங்கிய

## ஆசியுரை

அருள்மிகு சித்திவிநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் சித்திவிநாயகர் சனசமூக நிலைய வெற்றிவேல் கலாச்சார மன்றத்தை அமைத்துத் தந்துதவிய கலாநிதி வெ. திருஞானசம்பந்தர் அவர்களுக்கும், அவர் குடும்பத்தாருக்கும் நாவற்குழி சித்தி விநாயகர் ஆலய நிர்வாகசபையின் சார்பாக எனது நன்றியைத் தெரிவிப்பதுடன் அவர்கள் நீடுழி வாழ்ந்து நாவற்குழி கிராம முன்னேற்றத்திற்கும் ஆலயம் சிறப்புடன் விளங்குவதற்கும் மென் மேலும் பணிகள் பல புரிய விநாயகப் பெருமான் அருள் பாலிக்கும்படி பிரார்த்திக்கின்றேன்.

திருஞானசம்பந்தர் அவர்கள் 1985 ம் ஆண்டில் "வெற்றி வேல் சின்னம்மா பிரம்ம ஆலய இல்லம்" அமைத்து சித்தி விநாயகர் ஆலய பூசகருக்கு வீடாக அன்பளித்தமையையும் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

க. அன்னலிங்கம்
சித்திவிநாயகர் தேவஸ்தான
நிர்வாகசபை.

1989-06-04





வெற்றிவேல் சின்னம்மா பிரம்ம ஆலய இல்லம்
திருமதி வெற்றிவேலு சின்னம்மா
மறைவு : 1979
தோற்றம் : 1895
வாழ்க்கை : 0084

ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான பிரதமகுரு

**சிவஸ்ரீ இ. கந்தசாமிக் குருக்கள் அவர்கள்**

உவந்து வழங்கிய

## ஆசிச்செய்தி

உலகத்திலே பல்வேறு மொழி பேசும் பல இன மக்கள் வாழ்கின்றனர். அவர்களுடைய பண்பாடு கலாச்சாரம், மொழி இவற்றைவைத்து இன்ன இனத்தவர்கள் என்று இனம் கண்டு கொண்டுவிடலாம் அதேபோல் எமது தமிழ் இனத்தையும் பண்பாடு, கலாச்சாரம் என்பன மூலம் உலகத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள் நமது முன்னோடிகள்

நமது கலாச்சாரம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் அதை மேலும் மேலும் வளர்த்தெடுக்க வேண்டும். அதை வெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடைப்பேச்சின் மூலம் வளர்க்கமுடியாது. அதற்கு ஒரு கட்டடம் அமைத்து, அதன் மூலம் வருங்கால சிறுவர்களுக்கும் சரி, பெரியோர்களுக்கும் சரி, இயல், இசை, நாடகம் போன்றவற்றை உள்ளடக்கிய கலாச்சார பண்பாடுகளை தெளிவு படுத்துவதால் எமது இனத்தின் கலாச்சாரம் சிதைவுறுமல் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பது எனது கருத்து

எனவே இதற்கு முன்னேடியாக இதற்கு ஓர் கட்டடம் அமைத்து அதற்கு தனது தகப்பனுரின் பெயரையும் பொறிப்பதனுல் உயர் திரு பட்டயக்கணக்காளர் திருஞானசம்பந்தர், அவர்களின் தாய் தந்தையர் மேல் வைத்திருக்கும் பக்தியையும், தமிழினத்துக்காக தமிழ் இனத்தின் பண்பாடுகள், கலாச்சாரம் என்பன சிதைவுறுமல் பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற அந்தத் தியாகியின் மன உறுதியை வெளிப்படுத்தாமல் இருக்க முடியாது.

மேலும் மேலும் அவரின் கனவுகள் நிறைவு பெற இப்பேற்பட்ட கலாச்சார மன்றம் வளர்ச்சியடைய வேண்டும் என்று எல்லாம் வல்ல சித்திவிநாயகப் பெருமான் அருள் புரிந்து அவரின் நல்லாசியும் கிடைக்க வேண்டுகிறேன்.

வணக்கம்

சிவஸ்ரீ இ. கந்தசாமி குருக்கள்
பிரதம குரு
சித்திவிநாயகர் ஆலயம், நாவற்குழி

1989-06-04

நாவற்குழி சித்திவிநாகர் ஆலய தர்மகர்த்தாக்களில் ஒருவரும்
சித்திவிநாயகர் சனசமூக நிலையப் போசகரும்
கைதடி நாவற்குழி ஓய்வூதியர் நல்ன்புரிச்சங்கச் செயலாளருமாகிய
**திருவாளர் நா. செ. நாகரத்தினம் அவர்கள்**
மனமுவந்து வழங்கிய

## ஆசியுரை

கலாநிதி வெ. திருஞானசம்பந்தர் அவர்களின் உதவியுடன் நாவற்குழி சித்திவிநாயகர் சனசமூக நிலையத்தினர்களினுடைய விடாமுயற்சியினுல் உருவாக்கப்பட்டு இன்று திறப்பு விழாக் காணும் ''சித்திவிநாயகர் சனசமூகநிலைய வெற்றிவேல் கலாச்சார மன்று''க்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இக்கட்டிடம் அமைவதற்கு காணி வழங்க ஆலய பரிபாலன சபை எம்முடன் சகல ஒத்துழைப்பு நல்கியது பெருமைக்குரியது. நாடு சீர்குலைந்திருக்கும் இக்கால கட்டத்தில், ஏராளமான செல்வத்தை இழந்த பின்னும் இக்கட்டிடத்தை செவ்வனே செய்துமுடித்து எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டி பொதுவுடைமையாக்கித் தந்த இனிய பெரியார் திருஞானம் போல நாமும் எனக்கே சொந்தம் என்ற எண்ணத்தை விடுத்து பொதுச் சொத்தெல்லாம் எல்லோருக்கும் சொந்தம் என்ற பெருமனத்தோடு வாழ வேண்டும். கலாநிதி திருஞானம் பெருந்தகை பல்லாண்டு வாழ்ந்து எமது கிராமத்துக்கு மேலும் தொண்டுகள் செய்ய வேண்டும் என்று எல்லாம் வல்ல சித்தி விநாயகரைப் பிரார்த்திக்கின்றேன்.

வணக்கம்

நா. செ. நாகரத்தினம்
சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தாக்களில் ஒருவர்,
சித்திவிநாயகர் சனசமூக நிலையபோசகர்,
கைதடி, நாற்குழி ஓய்வூதியர் நலன்புரிச்சங்கச்
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவற்குழி (சித்தி விநாயகர்) இந்துமா மன்றத்தினர் வழங்கிய

## ஆசிச் செய்தி

வளர்ந்து வரும் சித்தி விநாயகர் சனசமூக நிலையத்திற்கென ஒரு கலாச்சார மன்று அமைத்துக் கொடுத்துள்ளார் உயர் திரு. வெ. திருஞானசம்பந்தர் அவர்கள். நாட்டின் நெருக்கடியான காலகட்டத்திலும் இவ்வரிய சேவையைச் செய்த இவரை சித்தி விநாயகர் இந்துமாமன்றம் மட்டுமல்ல ஊரே மட்டற்ற மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறது. இக் கலாச்சார மன்றிற்கு இவரது தந்தையாரின் பெயரைச் சூட்டி ''வெற்றிவேல் கலாச்சார மன்று'' என அழைக்கப் படுகிறது.

இக் கலாச்சார மன்றுனது அழகான அமைதியான சூழலில் சித்திவிநாயகர் சன சமூக நிலையத்துடன் இணைத்து அமைக்கப்பட்டுள்ளது. வயல் வெளிகளின் இடையே சித்தி விநாயகர் ஆலயத்தின் அருகில் அழகாக அமைந்துள்ளது.

எமது இளைஞர்கள் நல்நோக்குடையவர்கள் எமது கிராமத்தை முன்னேற்ற வேண்டும் என்பதில் தீராத ஆர்வமுடையவர்கள் எமது இளைஞர்கள் கையில் ஒப்படைக்கப்பட்ட இம் மன்றின் மூலம் பல கலைகளையும் வளர்த்து எமது சிறுர்களுக்கும் மக்களுக்கும் அரிய சேவை செய்வார்கள் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. இம்மன்று தன்னால் இயன்ற சேவைசெய்து சிறப்புடன் விளங்க வாழ்த்துகிறோம்.

தலைவர்
பொ. நடராசா
இந்து மாமன்றம்
நாவற்குழி.

நாவற்குழி சித்திவிநாயகர் சனசமூக நிலைய
முன்னை நாள் தலைவரும்
தற்போதைய உபதலைவருமாகிய சமூகத்தொண்டன்
திரு தம்பி பவளகேசன் அவர்களின்
அன்பு நிறைந்த

## ஆசிச்செய்தி

1982-ம் ஆண்டு உதயமான எமது சித்திவிநாயகர் சனசமூக நிலையம் எமது கிராமத்தின் முன்னேற்றத்திற்கும் அறிவுத்தாகத்திற்கும் அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளது.

சனசமூக நிலையத்தின் சேவை விஸ்தரிப்பு எண்ணப்பாடு எமது இளைஞர்கள் மத்தியில் தோற்றம் பெறத் தொடங்கிய போதே எமக்கென்று ஒரு கலாச்சார மண்டபத்திற்கான தேவையும் தோற்றம் பெறத் தொடங்கியது. இத் தேவையை பூர்த்தி செய்வதற்கு சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபையினர் அம் மண்டபத்திற்கான நிலப்பரப்பினை நன்கொடையாக எமக்களித்திருந்தனர்.

இம் மண்டபத்தினை அமைப்பதற்கான முழுச் செலவினையும் தாம் பொறுப்பேற்று உயர்திரு. வெ. திருஞானசம்பந்தர் (பட்டயக் கணக்காளர்) உருவாக்கித் தந்துள்ளார். நாட்டின் தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அழிவுகளை ஈடுசெய்ய தமிழினம் ஆக்கப்பணிகளில் ஈடுபட வேண்டிய தேவை வளர்ந்து கொண்டே செல்கின்றது இந்நிலையில் உயர்திரு. வெ. திருஞானசம்பந்தர் இப்பெரும் பணியை செய்ய முன்வந்தமையையிட்டு நானும், எமது நிலையமும் மகிழ்வும், பெருமையும், பெருமிதமும் அடைகின்றோம்.

இக் கலாச்சார மண்டபமானது எமது எதிர்கால சந்ததியினருக்கு கல்விக்கூடங்களை நடாத்துவதற்கும், கல்விமான்களை, அறிஞர்களை அழைத்து கருத்துரைகள் வழங்குவதற்கும், விளையாட்டுத்துறையில் எம் இளைஞர்களை திறமை மிக்கவர்களாக உருவாக்குவதற்கும் (கரம், சதுரங்கம்) ஏற்றதோர் மண்டபமாக மிளிர இருக்கின்றது. எமது இளைஞர்கள் நன்நோக்குடையவர்கள். எனவே மேன்மேலும் பல முன்னேற்றங்களைக் காண்பார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

எமது மண்ணிலே பிறந்து பிறந்த மண்ணிற்காகவும், தம் மக்களுக்காகவும் ஓர் கலாச்சார மண்டபத்தினை உருவாக்கி தந்தமைக்கு உயர்திரு. வெ. திருஞானசம்பந்தர் அவர்களுக்கும் அவர் தம் பாரியார் அவர்கட்கும், அவர் தம் பிள்ளைகளுக்கும் எல்லாம் வல்ல சித்திவிநாயகர் பெருமானின் திருவருளும், கருணையும் கிட்ட வேண்டும் என பிரார்த்தித்துக் கொண்டு திறப்பு விழா திருமங்கல திறப்புவிழாவாக மலரவும் நறுமணம் பரப்பவும் எனது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

1989-06-04

த. பவளகேசன்
சமூகத் தொண்டன்
நாவற்குழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவற்குழி சித்திவிநாயகர் சனசமூகநிலைய நிர்வாகம் பின்நோக்கிப் பார்க்கிறோம்....

தொடர்பாடல் என்ற எண்ணக்கரு மனித நாகரீகத்துடன் ஒன்றிணையத் தொடங்கிய காலத்திலேயே அதற்கான மார்க்கமும் மனிதனால் தேடப்பட்டது தேடுதலின் விளைவே வெகுசனத் தொடர்பு சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை வெகுசனத் தொடர்பு சாதனங்களின் வருகை உலகத்தினை சுருக்கியதுடன் மனித உளவாற்றலையும், ஆளுமையையும், தனித்துவத்தினையும் உறுதிப்படுத்தத் தொடங்கியது. இத்தொடர்பு சாதனங்களில் ஒன்றாக பத்திரிகை சிறப்பான இடத்தைப் பெறத்தொடங்கியது. பத்திரிகை வாசிப்போர் எண்ணிக்கை அதிகரித்தாலும் எம்போன்ற வறுமைக்கோட்டு எல்லைக்குள் வாழும் கிராம மக்களுக்கு குடும்பத்திற்கோர் பத்திரிகை என்ற அளவில் பர்ணமிக்கக்கூடிய அளவிற்கு இம்மக்களிடம் பணவசதி இருக்க நியாயமில்லை. இன்நிலையில்தான் 1982ஆம் காலகட்டத்தில் அப்போது எம்மத்தியில் சுறுசுறுப்புடன் இயங்கிய இளைஞர்கள் பத்திரிகை வாசிப்போர் கூடம் ஒன்றை அமைத்து கிராமத்து மக்களுடைய ஒட்டு மொத்தமான தேவையினை பூர்த்தி செய்ய முடியாதா என சிந்திக்கத் தலைப்பட்டனர்.

இச் சிந்தனை சக்தியுடன் கூடிய பின்னணி 09-05-1982 அன்று எமது இளைஞர்களை சித்திவிநாயகர் ஆலய முன்றலில் கூட வைத்தது. இக்கூட்டத்திற்கு அன்றைக்குத் துடிப்புடன் இயங்கிய 27 இளைஞர்கள் சமூகம் கொடுத்திருந்தனர் இவர்களுடைய கருத்துக்கள் உடன்பாடாகி அன்று ஒரு நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டதுடன் அதன் செயற்பாடும் உறுதிப்படுத்தப்பட்டது நிர்வாக உறுப்பினர்களுடன் ஏனைய இளைஞர்களின் ஒத்துழைப்பும் உறுதிபெற பத்திரிகை வாசிப்போர் கூடத்தினை எங்கே அமைப்பது? எப்படி அமைப்பது? நிதிக்கு என்ன செய்வது? என்ற கேள்விகளுடன் அதற்கான விடை தேடுதலிலும் எமது இளைஞர்கள் இறங்கினார்கள். அதன் விளைவு சித்திவிநாயகர் ஆலயத்திற்கு முன்பாக இருக்கும் ஆலய நிலப்பரப்பில் ஆலய பரிபாலன சபையினரின் அனுமதியுடன் தடிகளையும், கிடுகுகளையும் மூலப் பொருட்களாகக் கொண்டு ஒரு நிலையத்தை உருவாக்கத் தொடங்கினர். தொடங்கும் போது எல்லோர் மனதிலும் ஒரு கேள்வி உதயமாகி மறைந்த வண்ணம் இருந்தது. அது இதனைச் சாதிப்பதற்கான நிதி, பத்திரிகை போடுவதற்கான நிதி, இதனை எங்கே பெறுவது என்பது தான்.



இச்சிந்தனையின் விளைவு ஒவ்வொரு அங்கத்தவர்களும் தலா ருபா 10/- அல்லது அதற்கு சமமான மூலப் பொருட்களைக் கொடுக்க முடியும்· பத்திரிகைச் செலவினையும் நிலைய வளர்ச்சியினையும் ஈடு செய்ய ஆரம்பத்தில் ஒவ்வொரு அங்கத்தவரிடமும் இருந்து தலா ரூபா 7/- அறவிடமுடியும் என்ற உணர்வு மெய்வடிவம் பெறத் தொடங்கியதன் விளைவு தடிகளாலும் கிடுகுகளினாலும் ஆன ஓர் வாசிப்போர் கூடம் 18 - 06 - 82 அன்று உதயமானது. இக்கூடத்தில் ஈழநாடு, வீரகேசரி ஆகிய இரு பத்திரிகைகள் ஆரம்பத்தில் போடப்பட்டுவந்தாலும் 14-08-82 தொடக்கம் அ. முரளிதரன் ஈழநாடு பத்திரிகையை தான் போடுவதாக முன்வந்திருந்தார்.

1982ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் நிலையத்தைப் பொறுத்தவரையில் அபிவிருத்தியின் ஓர் திருப்புமுனையாக அமைந்தது எனக் கூறலாம். இக்காலப் பகுதியில் எமது இளைஞர்களால் நிலையத்திற்கான நிரந்தரக் கட்டிடத்தை உருவாக்குவதற்கான திட்டமிடல் உருவான காலப்பகுதி எனலாம். இதற்கான நிதி சேகரிப்புப்பற்றி பல எண்ண அலைகள் எம்மத்தியில் மோதி ஓய்ந்தாலும் இறுதியில் அதிர்ஷ்டலாபச் சீட்டு இழுப்பின்மூலம் இதனை சாதிக்கமுடியும் என்ற நம்பிக்கை உதயமாகியது. இந்நம்பிக்கையின் வெளிப்பாடு 12-03-83 அன்று பூர்த்தியாக்கப்பட்டு நிதி சேகரிப்பில் ஒரு கணிசமான வெற்றியினை ஈட்டிக்கொண்டோம் இவ்வெற்றியின் மறுபக்கத்தில சனசமூகநிலையம் தனித்து பத்திரிகைச் செய்தியினை மக்களுக்கு கொடுப்பதோடு நிற்காமல் விளையாட்டுத் துறையிலும் இளைஞர்களை ஊக்குவிக்க எண்ணங் கொண்டது. இவ் எண்ணம் 21-03-84 அன்று சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகமாக பர்ணமித்ததுடன் இந்நிலைய வளர்ச்சியின் மறு வெற்றிக்கும் எம்மை அழைத்துச் செல்ல முற்பட்டது இவ்வளவிற்கும் மத்தியிலும் எமது நிலையத்திற்கு என்று நிரந்தரக் கட்டிடத் தேவையினை பூர்த்தி செய்ய வேண்டிய நிதியில் கணிசமான தொகை அதிஷ்டலாபச் சீட்டு மூலம் பெறப்பட்டாலும் மேலதிக நிதியினை சேகரிக்க வெளிநாடுகளில் இருக்கும் எமது இளைஞர்கள் கைகொடுத்து உதவினார்கள். அவர்களின் நன்கொடைப்பணம் எமக்கு பக்கபலமாக இருந்து நிலையத்திற்கான நிதி சேகரிப்பினை மேலும் ஊக்கப்படுத்தியது,

ஆரம்பத்தில் இவ்விரண்டு வழிகளாலும் பெறப்பட்ட நிதியினைக் கொண்டு22-05-83 அன்று அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. வ. ந நவரத்தினம் அவர்களால் நிலையத்திற்கான அடிக்கல்நாட்டப்பட்டது. அடிக்கல் நாட்டுவிழாவினைத்தொடர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்திற்கான பெரும்பகுதி வேலைகள் எமது இளைஞர்களாலே மேற்கொள்ளப்பட்டிருந்தன. அத்திவாரம் வெட்டுதல், கல் அரிதல் என்று தொடங்கி இறுதிவரை இளைஞர்கள் தமது சக்தியைப் பயன்படுத்தி வந்தபோதும் எமக்கு நிதிப் பற்றாக்குறை என்பது தீராத ஒரு பிரச்சினையாகவே இருந்து வந்தது இதற்கு வழிதேட முடியாமல் எமது இளைஞர்கள் திண்டாடினாலும் இறுதியில் துணிச்சலுடன் எமது கிராம மக்களிடம் நிதி சேகரிக்கும் முயற்சியில் இறங்கினார்கள். இதன் விளைவு எமது கிராமமக்கள் பெரும் செல்வந்தர்களாக இல்லாதபோதும் தம்மால் முடிந்த நன்கொடைகளை அள்ளிக் கொடுத்தார்கள். பணமாகவும். பொருட்களாகவும் குறிப்பாக எமக்குத் தேவையான பனைமரங்களை எமது கிராமத்து மக்களே கொடுக்க முன்வந்திருந்தனர்.

நிலைய வளர்ச்சியின் அடுத்த பரிமாணத்தினை எமது பிரதேச அபிவிருத்தி வேலைகளில் கவனம் செலுத்துவதினூடாக இனம் காட்ட முயலலாம். இதில் இரண்டு விடயங்களை நாம் கவனத்தில் எடுத்திருந்தோம். ஒன்று எமது பிரதேச அபிவிருத்திக்கு என அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் பணத்தினை நாம் கையாள்வதனூடாக தரப்படும் வேலையினை உறுதியானதாக நிர்மானிக்க முடியும். அடுத்தது அதன்மூலம் பெறப்படும் இலாபப்பணம் எமது நிலையத்தின் கட்டிட வளர்ச்சிக்கு என பயன்படுத்த முடியும். இதற்கு எமது இளைஞர்களின் சக்தி கூடுதலாக பயன்படுத்தப்பட்டால்தான் குறிப்பிட்ட இலக்கினை அடைவது உறுதியாக்கப்படும். இதன் செயல் வடிவம் முதல்தடவையாக சித்திவிநாயகர் சுடலைவீதி திருத்த வேலைமூலம் சாதிக்கப்பட்டது. எமது நிதிகையாளுகையினை ஒரு திருப்திகரமான நிலையில் வைத்திருக்க வேண்டிய பொறுப்பு இக்காலப்பகுதியில் எமக்கு ஏற்படச் செய்யவே 04-10-83 இல் யாழ் நவீன சந்தை மக்கள் வங்கி கிளையில் ஒரு சேமிப்புக் கணக்கு ஒன்றினை உருவாக்குவது காலத் தேவையாகிறது. இது எமது நிலையத்தின் பொறுப்பான செயற்பாட்டிற்கு மேலும் ஊன்றுகோலாகியது.

நிலைய கட்டிட வளர்ச்சி எம்மை பொறுத்தவரை ஆமை வேகத்துடன் செயற்பட்டமை எமக்கு மிகுந்த துயரத்தினை எற்படுத்த தொடங்கியது. ஆனால் இது பற்றி நாம் ஆழமாக சிந்தித்தே வந்தோம். சிந்தனையின் ஒரு வழித்தன்மையும் எமது இளைஞர்களின் கூட்டுப் பொறுப்பும் முயற்சியில் நம்பிக்கையினை கொடுத்தது. நம்பிக்கை செயல்வடிவம் பெறத் தொடங்கிய போது 1984ம் ஆண்டு மகா சிவராத்திரி தினத்தினன்று மீண்டும் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு நடாத்த தீர்மானித்து அதனையும் எமது இளைஞர்கள் வெற்றிகரமாக நடாத்தி முடித்து அதன் மூலம் மீண்டும் கணிசமான பணத்தினை பெற்றுக் கொண்டார்கள். இந் நிதி சேகரிப்பின் அடுத்த முனையாக எமக்கு தோழ் கொடுத்தது ரீ. வி. படக்காட்சியாகும். இதன் மூலம் எமக்கு தேவையான நிதி பெறப்பட்டமை குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்



'சித்திவிநாயகர் ஆலயத்தில் இளைஞர்களுக்கு என ஒரு திருவிழா கொடுக்கப்பட்டு இளைஞர்களினால் அத்திருவிழா சிறப்பிக்கப்பட்டும் வந்தது. இளைஞர்களின் சக்தி ஒரே சக்தியாக சனசமூகநிலையத்தினூடாக பிரதிபலித்ததினால் அத்திருவிழாவினை நிலையத் திருவிழாவாக மாற்றிக் கொள்ள எமது இளம் சமூகம் உணர்வு பூர்வமாக யோசிக்கத் தொடங்கியது. எமது இளைஞர்களிடம் சிந்தனை சக்திக்கு செயல் வடிவம் கொடுக்கும் திறன் கூடவே இருந்திருக்கின்றது என்பதற்கு பல உதாரணங்கள் இருந்தாலும் அதில் இளைஞர் திருவிழாவினை நிலையத் திருவிழாவாக்கி சிறப்பித்தமையினை குறிப்பிட்டுக் கூறிக் கொள்ளலாம். இச் சிறப்பான செயற்பாடு 1984ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை சாதிக்கப்பட்டு வருகின்றது.

இளைஞர் சக்தியின் செயற்பாடு தனித்து ஆண் வர்க்கத்திற்கு மட்டும் உரிமையுடையது என்ற விதிப்பாடு சமூகமட்டத்தில் தூக்கியெறியப்பட்டு முற்போக்கு எண்ணக்கரு உதயமானதைத் தொடர்ந்து உருவாகிய விழிப்புணர்வு எமது சமூக மக்களுக்கும் எற்பட்டதைத் தொடர்ந்து எமது நிலையத்தில் பெண் அங்கத்தவர்களும் இணைந்து செயல்பட முன்வந்தார்கள். எமது நிலையத்தினை பொறுத்தவரை இம்முற்போக்கு எண்ணக் கருவினை சிறப்பித்த ஆண்டாகிய 1985ஆம் ஆண்டு சித்திரை மாதம் சிறப்பான ஆண்டாகவே கருதவேண்டியுள்ளது.

எம்மைப் பொறுத்தவரையில் நிலையக் கட்டிட வளர்ச்சிக்கான நிதிசேகரிப்பு என்பது பாரிய பொறுப்புவாய்ந்த ஒன்றாக இருந்ததுடன் இளைஞர்களை ஆழமாகவும் சிந்திக்கத் தூண்டியது எனக்கூறுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகவே இருந்தது. தவிர்க்க முடியாத இப்பிரச்சினை ஆலயத் திருவிழா உற்சவத்தின்போது மீண்டும் ஓர் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு ஒன்றை நடத்தவேண்டிய தேவையினை ஏற்படுத்திக் கொடுத்ததுடன் நிற்காமல் 11-11-85 தீபாவளியன்று கட்டிட வளர்ச்சிக்காக நாவற்குழி மகா வித்தியாலளத்தில் நாடகங்கள் நடாத்தி நிதி சேகரிக்கவும் செய்திருந்தது. இப்பேற்பட்ட செயற்பாட்டின்மூலம் பெறப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதி தனித்து கட்டிட வளர்ச்சிக்கு மட்டும் பயன்படுத்தப்படாமல் எம்மத்தியில் புதிதாக தோற்றம்பெற்ற இந்துமாமன்றத்திற்கும் பயன்பட்டிருந்தது. இச்செயற்பாடு 05-01-86 அன்று நடைபெற்றமை குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒருவிடயம் எனலாம்.

முன்பு குறிப்பிட்டது போல நிலையத்தின் சமூகநோக்கு எமது பிரதேச எல்லைக்குட்பட்ட அரசாங்க செலவீனங்களுடனுன அனைத்து வேலைகளையும் பெறுப்பேற்கச் செய்தது. இதன் அடுத்த பரிமாணமாக நாம் காணக்கூடியது தீப்பாய்ந்த பள்ளக் குளத்தின் அணைக்கட்டு ஒப்பந்தத்தினை பொறுப்பேற்றுச் செய்ய விழைந்ததேயாகும். இவ்வணைக்கட்டு சித்திவிநாயகர் சுடலை வீதிக்கு மிகவும் அவசியமானதுடன், அவசரமானதாகவும் இருந்ததுடன் நிலையம் இவ்வேலைமூலம் இலாபம் என்பதை புறக்கணித்து உறுதியான வேலையாக இருக்கவேண்டும் என்பதைக் கவனத்தில் எடுத்துச் செயல்பட்டிருந்தது.

கலைஞனே, ஆய்வாளனே தமது படைப்புகளை வெளிக்கொணர முற்படுகின்றபோது அனுபவிக்கின்ற பிரசவ வேதனை எம்மையும் விட்டுவைக்கவில்லை. இவ்வேதனையின்பின் அவன் அடைகின்ற மகிழ்ச்சியோ எல்லையற்றது. இதனைப்போலவே 12-09-86 அன்று நாம் அனைவரும் மூன்று வருடங்களாக அனுபவித்த பிரசவ வேதனையின் நற்பலனைப் பெற்றுக்கொண்டோம். ஆம் அன்று எமக்கும், எமது கிராம மக்களுக்கும் மகிழ்ச்சியான நாள். அன்றுதான் எமது நிலையம் உயர்திரு வெ. திருஞானசம்பந்தர் [பட்டயக் கணக்காளர்] அவர்களால் உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது. தற்போது எம்மத்தியில் புதுப்பொலிவுடன் காட்சிதரும் இவ் அழகிய கட்டிடம் எம்மவர்களின் ஒன்றிணைந்த சக்தியின் வெளிப்பாடு, வீரியத்தின் சிறப்பு.

இச்சிறப்பான செயற்பாட்டிற்கும் அப்பால் நிலைய வளர்ச்சி என்பது கருக்கட்டிய சூலுக்குள் சிதைந்து போகாமல் பார்க்க வேண்டிய உயிருக்கு சமனுக இருந்தது. இதனைப் பேணிப் பாதுகாக்கும் முயற்சியின் அடுத்த கட்டமாகவே 01-11-1986 அன்று சனசமுகநிலைய அறையில் ஒரு சிறிய நூலகத்தினை ஆரம்பிப்பது என்ற எண்ணம் உதயமாகியது. இவ்வெண்ணத்தின் ஆரம்ப ஊற்று உயர்திரு, வெ. திருஞானசம்பந்தர் அவர்களிடம் இருந்து உதயமானதுடன் முதலில் அவரே முன்வந்து தன்னிடம் இருந்த பல அரிய நூல்களை அன்பளிப்பும் செய்திருந்தார். இவரின் கைங்கரியத்துடன் ஆரம்பமாகிய நூல் நிலையம் எமது கிராமத்து மக்களிடம் இருந்தும் பல அரிய நூல்களை



நூலகத்திற்கு கொண்டு வந்து சேர்த்ததுடன் நிற்காமல் நூல் இரவல் கொடுக்கும் பகுதியை சிறப்புற செயற்படுத்தி எமது மக்களின் வாசிக்கும் தேவையின் ஒரு பகுதியை என்றாலும் பூர்த்தி செய்ய விழைகின்றது.

ஒன்றுக்கொன்று முரணுன மூலவழப் பற்றாக்குறையும் அதிகரித்துச் செல்லும் மனித தேவையும் புதிய தேடலுக்கு மனிதனை இழுத்துச் செல்லும் அல்லது இருக்கின்ற மூலவழங்களை சிறப்பாக பயன்படுத்தக்கூடிய வழிமுறைகளை தேடச் செய்யும். இவ்யதார்த்த பூர்வ உண்மை எம்மையும் சோர்ந்திருக்க விடவில்லை. எமது கிராமம் அழகிய வயல்கள் நிரம்பிய கிராமம். இவ்வயல்கள் நடுவே இருக்கும் ஒவ்வொரு குளங்களும் விவசாயிகளின் நீர்த் தேவையினை காலத்தேவைக்கு ஏற்ப பூர்த்தி செய்தே வந்தது. இக் குளங்களை புனரமைக்க ஊற்று நிறுவனம் முன் வந்தபோது அதனை சரியான முறையில் பயன்படுத்தி எமக்கு தேவையான அளவில் புனரமைக்க நாம் முற்பட்டோம். அதன் விளைவாக தீப்பாய்ந்த பள்ளக்குளம், யாட்டாவளை ஆண்டிச்சான் குளம், பிச்சம் பள்ளக்குளம் என்பன ஊற்று நிறுவனத்தாரின் ஆதரவுடன் எம்மவர்களினுல் புனரமைக்கப்பட்டு எமது மூலவழங்களை பேண வழிதேட முற்பட்டோம்.

மேற்கூறியபடி அதிகரித்துச் சென்ற தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு எமக்கே இருந்தமையால் அதற்கான வழி தேடலிலும் நாமே இறங்கினேம். அதில் இருந்துதான் எமது நிலையத்தின் அடுத்த பரிமாணத்தினை இனம் காட்டிக் கொள்ளமுடியும். மனிதநாகரிகத்தின் உச்சக்கட்ட வளர்ச்சிக்கு பெரும் துணையாகவும் மூலப்பொருளாகவும் இருந்தது கல்வியே, இக்கல்வி ஆரம்பத்தில் இதயசுத்தியுடன் ஒழுங்காகப் போதிக்கப்பட்டாலே இளம் சமுதாயம் மறுமலர்ச்சியுடன் முற்போக்கு எண்ணக் கருக்களை கொண்டு வெளி உலகில் நடமாட முடியும். இதற்கு எம்மவர் என்ன செய்ய முடியும் என நம்மை நாமே கேட்டோம் பல நாட்கள் எமக்குள்ளேயே விவாதித்தோம். இளம் சமுதாயத்தினர் கல்விக்கு பாலர் பாடசாலை ஒன்று அவசியம் என்ற எண்ணக்கரு உதயமாகத் தொடங்கியது. ஆனுல் இதனை செயற்படுத்த உண்மையில் திராணியற்றே இருந்தோம். இரும்பினும் காலத்தேவை எம்மை சுறுசுறுப்படையச் செய்தது. உயர்திரு. வெ. திருஞானசம்பந்தர் அவர்களுடன் எமது எண்ணங்களையும், அபிலாசைகளையும் மனம்திறந்து பேசினேம். தன் கிராமத்து மக்களில் அவரின் அன்பும், கரிசனையும் அதன்மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பட்டது. தானே இதற்கான சகல பொறுப்புக்களையும் ஏற்று எமது அபிலாசைகளை நிறைவேற்றுகின்றேன் என்று உறுதியளித்தார். இவ் உறுதியின் வெளிப்பாட்டிற்குப் பின்னும் எமக்கு பிரச்சினை இருக்கத்தான் செய்தது. பாலர் பாடசாலை அமைக்க எமது கிராமமண்ணின் மைந்தன் முன்வந்தாலும் தேவையான நிலப்பரப்பு பெரும் பிரச்சினையாகவே இருந்தது. இதற்கு தருணம் பார்த்து ஆலய பரிபாலனசபை கைகொடுத்து எமது சனசமூக நிலையத்திற்கு வடக்கே உள்ள நிலப்பரப்பில் அப்பாலர் பாடசாலையினை அமைக்க அனுமதி தந்தனர். இவர்களின் தாராள சிந்தனையுடன் உயர்திரு. வெ. திருஞானசம்பந்தரின் தாராள மனதும் இணைந்தன. முடிவு எங்கள் முன் உயர்ந்து காட்சி தரும். இவ் அழகிய கட்டிடம் பட்டயக் கணக்காளர் அவர்களாலே உருவாக்கப்பட்டது. இதற்கான அடிக்கல் 12-02-87 அன்று உயர்திரு. வெ. திருஞானசம்பந்தர் அவர்களாலேயே நாட்டப்பட்டது. இன்று இக்கட்டிடத்தினை திறந்து வைக்க நாம் இறைஆசியுடன் திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.

இன்றைய தினம் எமக்கு மீண்டும் ஒரு புனிதமான தினம் இன்றைய தினத்தில் எமது மிகவும் உணர்வு பூர்வமான செயற்பாட்டின் விழுமியங்களை நினைவு கூர்ந்து நாம் எமக்குள்ளேயே ஒருவருக்கு ஒருவர் கைலாகு கொடுக்க முனைப்படைகின்றோம். ஓய்வின்றி இயங்கிக் கொண்டிருக்கும் இயற்கைக்குள்ளே மாற்றங்கள் யதார்த்தமானவை. இவ் உணர்வு பூர்வமான உண்மையினை எமது கடந்த ஏழாண்டு கால வரலாறுமே உணர்த்திவிட்டது. மாற்றங்கள்தான் மனித நடத்தையினை நிர்ணயிக்கின்றன. தூய சித்தாந்த சிந்தனையுடன் கூடிய செயற்பாடும், நல்ல ஒழுக்கமும் ஏற்படும் மாற்றங்களுடன் ஒன்றிணையுமானால் எமது இளைஞர் சமுதாயம் இதுவரை சாதித்ததை விட பல மடங்கு அதிகமாக எதிர்காலத்தில் சாதிக்கும் வரலாற்று ஏடுகள் கற்றுக் கொடுக்கின்ற புனிதமான பாடங்களும், செயற்பாட்டுதிறனின் வெளிப்பாடும் எமது கிராம மக்களை, எமது கிராம மண்ணை என்றும் தூய்மைப் படுத்தும். அதனூடாகவே நாமும் கூடவே வளர்ந்து வருவோம். சரியான கருத்தும், செயற்பாடும் எம்முடன் கூடவே வளர்ந்து வரும். இவ்வளர்ச்சி எம்மை நாமே குறுக்கிக் கொள்ளாமல் எம்மை பரந்த அடிப்படையில் நோக்கச் செய்யும். இதுவே எமது சமுதாயத்திற்கு இன்றைக்கு அவசரமானதும் அவசியமானதும் என்று கூறலாம்

நாவற்குழி
1989-06-04

சித்திவிநாயகர் சனசமூகநிலைய
நிர்வாகிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவற்குழி சித்தி விநாயகர் சனசமூக நிலைய ஏழாண்டு கால நிர்வாகசபை உறுப்பினர்களின் முழுவிபரம்.

| ஆண்டுகள் | 1982/83 | 1983/84 | 1984/85 | 1985/86 | 1986/1987 | 1987/88 | 1988/89 |
|---|---|---|---|---|---|---|---|
| போஷகர் | திரு. —— | —— | செ. நாகரத்தினம் | செ. நாகரத்தினம் | செ. நாகரத்தினம் | செ. நாகரத்தினம் | செ. நாகரத்தினம் |
| தலைவர் | திரு. த. பவளகேசன் | த. பவளகேசசன் | த. பவளகேசன் | த. பவளகேசன் | த. பவளகேசன் | த. பவளகேசன் | ஆ. அமிர்தலிங்கம் |
| செயலாளர் | திரு சி. பாலரஞ்சன் | ந. பாஸ்கரன் | சி சாந்தமூர்த்தி | த கிருஷ்ணமோகன் | அ. முகுந்தன் | த. கிருஷ்ணமோகன் | சி. சாந்தமூர்த்தி |
| பொருளாளர் | திரு. ப. ஸ்ரீஸ்கந்தராசா | சி. பாலரஞ்சன் | பொ. அழகராசா | ஆ. அமிர்தலிங்கம் | க ரவீந்திரன் | ஆ. அமிர்தலிங்கம் | அ. முகுந்தன் |
| உப தலைவர் | திரு. க. யோகேஸ்வரன் | அ. முகுந்தன் | ஆ. அமிர்தலிங்கம் | பொ. அழகராசா | இ. அருந்ததி | இ. அருந்ததி | த. பவவகேசன் |
| உப செயலாளர் | திரு. அ. முகுந்தன் | ம. மணிவண்ணன் | த. கிருஷ்ணமோகன் | ப. கிரிஜா | ச. இந்து | ப. கிரிஜா | க. மணிமாறன் |
| கணக்காய்வாளர் | திரு. பொ. அழகராசா | சி. மனோகரன் | சி. மனோகரன் | சி மனோகரன்<br>(7-12-85 வரை) | சி. சாந்தமூர்த்தி | க மணிமாறன் | த. கிருஷ்ணமோகன் |
| நிர்வாகசபை உறுப்பினர் | திரு. த. ஹரிகரன் | த. ஹரிகரன் | த. ஹரிகரன் | செ. சாந்தி<br>(7-12-85 வரை) | இ. அற்புதராசா | ம. உதயணன் | இ. கந்தசாமி<br>(வி ரு. தலைவர்) |
| நிர்வாகசபை உறுப்பினர் | திரு. ந. பாஸ்கரன் | க. ரவீந்திரன் | ப. ஸ்ரீஸ்கந்தராசா | க. சிவானந்தன் | ம. மன்மதன்<br>(6-12-86 ப.கீ) | க. வேல் அழகன் | பொ. அழகராசா<br>(வி. ரு. தலைவர்) |
| நிர்வாகசபை உறுப்பினர் | திரு. ம. மணிவண்ணன் | த. கிருஷ்ணமோகன் | த. பாஸ்கரன் | பொ. ஈஸ்வரன் | தி. நிரஞ்சன் | இ. பிரபாகர் | ம. மன்மதன் (நி. பொறு) |
| நிர்வாகசபை உறுப்பினர் | திரு. த. கிருஷ்ணமோகன் | பொ. அழகராசா | க. ரவிசங்கர் | க. மணிமாறன்<br>(கணக்காய்வாளர்) | இ. செல்வரத்தினம்<br>(6-12-86 ப.கீ) | சொ. ஜனகன்<br>அ. முகுந்தன் | ப. கிரிஜா (நூ.பொறு)<br>சோ. காந்தி (நி. உ.) |
| நிர்வாகசபை உறுப்பினர் | திரு. சி. மனோகரன் | க. யோகேஸ்வரன் | ம. மணிவண்ணன் | ம. உதயணன் | க. தவபாலன் | | தி. நிரஞ்சன் (நி. உ.) |
| நிர்வாகசபை உறுப்பினர் | திரு. இ. தெய்வேந்திரராசா | ப. ஸ்ரீஸ்கந்தராசா | சி. செல்வராசா | க. பாரதிமோகன் | ஆ. அமிர்தலிங்கம் | ச. இந்து | —— |
| நிர்வாகசபை உறுப்பினர் | திரு. —— | —— | —— | இ. பிரபாகர்<br>(7-12-85 தொட) | ப. கிரிஜா<br>(6-2-86 நியமனம்) | —— | |
| நிர்வாகசபை உறுப்பினர் | திரு. —— | —— | —— | க. ரவீந்திரன்<br>7-12-85) | சி. செல்வராசா<br>(6-12-86 நியமனம்) | —— | —— |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவற்குழி சித்தி விநாயகர் சனசமூக நிலைய

# வெற்றிவேல் கலாச்சாரமன்று

## அடிக்கல் நாட்டு விழா அறிக்கை

நாவற்குழி சித்தி விநாயகர் சனசமூக நிலைய "வெற்றிவேல் கலாச்சார மன்று" அடிக்கல் நாட்டு விழா சித்திவிநாயகர் சனசமூக நிலைய முன்றலில் 12-2-87 வியாழக்கிழமை காலை 8-04 மணிமுதல் 9-04 மணி வரை உள்ள சுபவேளையில் பிரதம விருந்தினர் கலாநிதி வெ. திருஞானசம்பந்தர் (பட்டயக் கணக்காளர் திருஞானஸ் அன் கோ, யாழ்ப்பாணம்) அவர்களால் அடிக்கல் நாட்டிச் சிறப்பித்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நிலைய அங்கத்தினரான செல்விகள்: குமாரசாமி, செல்வரத்தினம் ஆகியோரின் விநாயகர் வழிபாட்டுடன் கூட்டம் ஆரம்பமானது.

முதலில் திரு. நா. செ. நாகரத்தினம் (நிலையப் போஷகர்) அவர்கள் தலைமை உரை வழங்கினுர். அதனைத் தொடர்ந்து சிவஸ்ரீ. இ. கந்தசாமிக் குருக்கள் (பிரதம குரு; ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம், நாவற்குழி) அவர்கள் ஆசியுரை வழங்கினுர். பின் சகலரையும் வருக! வருக!! என வரவேற்று வரவேற்பு உரையை செல்வன் சி. தவகுமாரன் (நிலைய அங்கத்தவர்) வழங்கினுர். அதன் பின் பிரதம விருந்தினர் கலாநிதி வெ. திருஞானசம்பந்தர் அவர்கள் பிரதம விருந்தினர் உரையை நிகழ்த்தினுர். பிரதம விருந்தினர் உரையைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர்களான திரு. த. முத்துக்குமாரசாமி (அதிபர், நாவற்குழி மகாவித்தியாலயம்) அவர்கள், திரு. பொ. சுப்பையா (சமாதான நீதிபதி, நாவற்குழி) அவர்கள், திரு. இ. சொக்கலிங்கம் (ஆசிரியர், நாவற்குழி) அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், திரு. த. தியாகராஜா (இளைப்பாறிய அதிபர், நாவற்குழி) அவர்கள், திரு க. அன்னலிங்கம் (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்) அவர்கள், திரு ஆ. நடராஜா (உப-அலுவலக சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர், நாவற்குழி) அவர்கள், செல்வி கு. கோபி (நிலைய அங்கத்தவர்) அவர்கள், திரு அ. ஆ. அமிர்தலிங்கம் (சனசமூகநிலைய நிர்வாகசபை உறுப்பினரும், சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகத் தலைவரும்) அவர்கள் ஆகியோர் சிறப்பு விருந்தினர் உரையை நிகழ்த்தினார்கள். இதனைத் தொடர்ந்து பிரதமவிருந்தினர் கலாநிதி வெ. திருஞானசம்பந்தர் அவர்கள் பதிலுரை வழங்கினார். திரு அ. முகுந்தன் (நிலையச் செயலாளர்) அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

இவ் விழாவில் நிலையப் போஷகர் திரு. நா செ. நாகரத்தினம் அவர்கள் தலைவர் உரையில் பிரதம விருந்தினரைக் கௌரவித்து இவ் வெற்றிவேல் கலாச்சாரமன்று அமைப்பதற்கு முன்வந்தமையைப் பாராட்டி திரு வெற்றிவேலுவும் திருமதி சின்னம்மாவும் செய்த தவப் பயனாகவே கலாநிதி வெ. திருஞானசம்பந்தர் அவர்கட்கு இந்த நற்பண்பு கிடைத்துள்ளது என்றும்' திரு வெற்றிவேல் அவர்கள் நாவற்குழியில் மிகவும் அமைதியான வாழ்க்கை வாழ்ந்தார் என்றும், அவரைத் தெரிந்தவர்களுக்கும் அவரோடு வாழ்ந்தவர்களுக்கும் இது நன்றாக விளங்கும் எனவும் கூறினார். ''பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் நற்றவர் வாழ்விலும் நனி சிறந்தனவே'' என்பதற்கேற்ப கலாநிதி வெ. திருஞானசம்பந்தர் அவர்கள் தனது தாயின் நினைவாக 10-8-85 இல் சித்தி விநாயகர் ஆலயத்தின் அருகே குருக்கள் வசிப்பதற்கு ''வெற்றிவேல் சின்னம்மா பிரம்ம ஆலய இல்லம்'' கட்டிக் கொடுத்தார் மேலும் தனது அருமைத் தகப்பனின் நினைவாக இக் கலாச்சார மன்று அமைத்துக் கொடுக்க சித்திவிநாயகர் அருளால் முன்வந்துள்ளார் என்றும் சித்தி விநாயகர் அருளால்



தொடர்ந்து சரிவர நிறைவேற்றுவார் எனத் தான் நம்புவதாகவும் கூறினார்.

தொடர்ந்து சித்திவிநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ. இ. கந்தசாமிக் குருக்கள் அவர்கள் தனது ஆசியுரையில் கலாச்சார மன்றத்தின் தேவையை உணர்ந்து அதைச் செய்ய முன்வந்ததற்கு பாராட்டி இது அவரது சொந்த அபிலாசையாக இருந்தாலும் கிராம மக்களின் நலன் கருதி அதை நிறைவேற்றுவதற்கு மனம் மட்டும் இருந்தால் போதாது ஆத்மீக பலனும் இருப்பதால்த்தான் இது கைகூடுகின்றது என்றும் எல்லோராலும் இப்படிச் செய்ய முடியாது. கலாநிதி வெ, திருஞானசம்பந்தர் அவர்களுக்கு இப் பலன் கிடைத்துள்ளது என்றும் கூறினார்

நிலைய அங்கத்தவரான செல்வன். சி தவகுமாரன் தனது வரவேற்புரையில் தமது நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றும் வகையில் கலாச்சார மன்றத்தை அமைத்துக் கொடுக்க முன்வந்த கலாநிதி. வெ. திருஞானசம்பந்தர் அவர்களையும், அவரது பாரியார் அவர்களையும், சிறப்பு விருந்தினர்களையும் மற்றும் பிரமுகர்களையும், சபையோர்களையும் வருக! வருக!! என வரவேற்றார்.

அடுத்து பிரதம விருந்தினர் கலாநிதி. வெ. திருஞானசம்பந்தர் அவர்கள் தனது சிறப்புச் சொற்பொழிவில் எல்லாம் வல்ல சித்தி விநாயகரை வணங்கி தனது மறைந்தும் மறையாத பெற்றோரை நினைவு கூர்ந்து, பிரதம குருவையும் வணங்கி சிறப்பு விருந்தினர்களையும், பிரமுகர்களையும் கௌரவித்தார் பின் ஒரு நாட்டை முன்னேற்ற அங்கு நூல் நிலையம், சர்வ கலாசாலை, தொழில் நுட்பக் கல்லூரி போன்றன இருத்தல் அவசியம். இதன் நோக்கமாக வளர்ந்து வரும் தமது கிராமத்தில் கலாச்சார மன்று அமைக்க வேண்டும் என்ற தனது விருப்பத்தை சனசமூக நிலைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இக்கலாச்சார மன்றைத் தனது தந்தையின் நினைவாக அமைக்க முன்வந்துள்ளதாகவும், நாளை என்ன நடக்குமோ! என்ற ஏக்கத்தில் நாமெல்லோரும் இருந்தாலும் இதன் பயனைப்பெற வேண்டும் என்ற விருப்பத்தால் எல்லாம் வல்ல சித்தி விநாயகர் துணையுடன் இதை நிறைவேற்றுவோம் என்று நம்புவதாகக் கூறினார். தான் தனது பெற்றோரின் நினைவாகச் செய்வதன் முக்கிய நோக்கம் மற்றவர்களும் இதேபோல சந்தர்ப்பம் கிடைக்கும்போது செய்ய வேண்டும் என்றும் கூறினார். அத்துடன் அவர் தான் செய்யும் தனது முயற்சிக்கு தனது பாரியாரும் முழு ஊக்குவிப்பு தருகின்றபடியால்த் தான் இப்படியான காரியங்களைச் செய்ய முடிகிறது என்று கூறினார். மேலும் இக்கலாச்சாரமன்று தொடர்ந்து இயங்கி கிராம மக்களை முன்னேற்றும் நிகழ்ச்சிகள் அதாவது பொருட்காட்சி, கலை, கலாச்சார போட்டிகள் போன்றவற்றை நிகழ்த்தி கிராம மக்கள் முன்னேற வழிவகைகள் செய்ய வேண்டும் எனக் கூறினார். மேலும் மாணவர்கள் தமது பாடசாலையில் பெறும் அறிவிலும் மேலாக தங்கள் தொழில் நிறுவனங்களில்த் தான் அனுபவரீதியாக கூடிய அறிவைப் பெற முடியும் எனக் கூறினார்.

அடுத்து சிறப்பு விருந்தினரான திரு த. முத்துக்குமாரசாமி அவர்கள் தனது உரையில் நாகரிகங்கள் மாறும் இக்காலத்தில் கலை, கலாச்சாரங்கள் மாறுகின்றன என்றும் இம்மாற்றங்களுக்கேற்ப இக் கலை, கலாச்சாரங்கள் பேணப்பட வேண்டும் என்றும் இதற்காக இப்படிப்பட்ட கலாச்சார மன்றங்கள் அமைக்கப்படுவது பாராட்டுதலுக்குரிய தெனவும், மேலும் பாலர் பாடசாலை இயங்குவதற்கு இது உதவுவது மகிழ்ச்சிக்குரிய விடயம் என்றும் சிலர் பிறந்த இடத்தை மறந்து விடுவதும் உண்டு. ஆனால் பட்டயக் கணக்காளர் திரு. வெ. திருஞானசம்பந்தர் அவர்கள் தான்



பிறந்த இடத்திலேயே தேவைகளை உணர்ந்து அவ்வப்போது உதவி செய்வது இவ்வூர் மக்களுக்குக் கிடைத்த பெரும் பேறாகும் என்றும் எத்தனையோ பேர் பணத்தை வட்டிக்குக் கொடுக்கிறார்கள். ஆனால் ஒரு சிலரே இப்படியான நல்ல காரியங்களுக்காக பணத்தை செலவிடுகிறார்கள் என்றும் கூறினார்.

அடுத்து சிறப்பு விருந்தினருள் ஒருவரான திரு. பொ. சுப்பையா (சமாதான நீதிபதி) அவர்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அப்போதைய இளைஞர்களுக்கும் முன்னைநாள் கிராமசபைத் தலைவர் திரு. சோ. சடாட்சரம் அவர்கட்கும் இப்படியான ஓர் எண்ணம் இருந்தது என்றும் அவ் எண்ணம் இப்போதாவது நிறைவேறுவதையிட்டு கலாநிதி. வெ. திருஞானசம்பந்தர் அவர்களை மிகவும் பாராட்டுவதாகவும் இப்படியான காரியங்களைச் செய்வதற்கு மனம் இருக்க வேண்டும் அதோடு நல்ல நோக்கமும் இருக்க வேண்டும் என்றும் கூறினார்.

அடுத்து சிறப்பு விருந்தினருள் ஒருவரான திரு. இ. சொக்கலிங்கம் ஆசிரியர் அவர்கள் கலாநிதி. வெ திருஞானசம்பந்தர் அவர்கள், கிராமத்தின் தேவைகளை உணர்ந்து பல சேவைகளை செய்துள்ளார் என்றும் அவ்வாறே இப்போது இந்தக் கலாச்சார மன்றை அமைக்க முன் வந்துள்ளார் என்றும் கலாநிதி வெ. திருஞானசம்பந்தர் அவர்களை ''மண்ணின் மைந்தன்'' என்று குறிப்பிட்டு தானும் நாவற்குழி மக்களும் இவருக்கு என்றென்றும் கடமைப் பட்டவர்கள் என்றும் கூறினார்.

அடுத்து சிறப்பு விருந்தினருள் ஒருவரான திரு. த. தியாகராஜா அவர்கள் கலாநிதி வெ. திருஞானசம்பந்தர் அவர்கள் இப்படியான நல்ல காரியங்கள் செய்வதற்கு அவருக்கு கிடைத்த பாக்கியம் அவரின் பெற்றோரால் கிடைத்த முதுசம் என்றும் கலாநிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கூறிய கருத்துக்களில் "தொழிற்சாலைகளை உருவாக்கி, தொழிலாளர்களை பங்குதாரர்களாக்க வேண்டும்" என்ற கருத்து ஆழ்ந்த ஒரு கருத்து எனவும் அவருடைய அக்கனவு நனவாக எல்லாம் வல்ல சித்தி விநாயகருடைய அருள் கிடைக்க பிரார்த்திக்கத்தான் எங்களால் முடியுமே தவிர வேறெதுவும் செய்ய இயலாதெனவும் கலாநிதி அவர்கள் கூறியது போல அவருக்கு அவருடைய மனைவியின் ஒத்துழைப்பு இருப்பதுதான் அவர் உற்சாகமாக செயற்படக்கூடியதாக இருக்கிறது என்பது "மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்பதிலிருந்து புலப்படுகிறது என்றும் கூறினார்.

அடுத்து திரு. க. அன்னலிங்கம் அவர்கள், கலாநிதி வெ. திருஞானசம்பந்தர் அவர்கள் நாங்கள் கேட்ட போது குருக்கள் இருப்பதற்கு இல்லம் அமைத்துக் கொடுத்தார் என்றும் இப்போது நாங்கள் கேட்கும் போது கலாச்சார மன்றை அமைக்க முன்வந்துள்ளார் என்றும் இவருக்கும் இவருடைய குடும்பத்திற்கும் தான் என்றென்றும் நன்றியாக இருப்பேன் என்றும் கூறினார்.

அடுத்து சிறப்பு விருந்தினருள் ஒருவரான திரு. ஆ. நடராஜா அவர்கள் "வெற்றிவேல் கலாச்சார மன்றை" கலாநிதி அவர்கள் வெற்றியாக நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் ஏனெனில் இது அரசாங்கத்தின் எந்தவித உதவியும் இல்லாமல் அவருடைய சொந்த முயற்சியிலேயே உருவாக்கப்படுவதாகவும் கலாநிதி அவர்கள் தனது பெற்றோரின் நினைவாக இப்படியான பல சேவைகளைப் புரிவதிலிருந்து அவர் ஒரு காந்தியவாதி எனவும் தான் கலாநிதி அவர்களை பல சந்தர்ப்பங்களில் சந்திக்கும் போது அவரின் காந்தியக் கொள்கைகள் புலப்படுவதாகவும் மேலும் இக் கலாச்சார மன்று அமைவது சித்தி



விநாயகர் சனசமூக நிலையத்தின் அடுத்த முன்னேற்றப் படியாக உள்ளது என்றும் கூறினார்.

அடுத்து செல்வி கு. கோபி அவர்கள் இக்கலாச்சார மன்று அமைக்கப்படுவது சனசமூக நிலையத்தின் வளர்ச்சி என்று குறிப்பிட்டு, சனசமூக நிலையத்தின் முன்னேற்றத்தையும் குறிப்பிட்டு மேலும் இக் கிராமத்தின் இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள், பெரியோர்கள் எல்லோரதும் பூரண ஒத்துழைப்பு இருக்குமானால் சிறந்த பயனை அடையலாம் எனவும் கலாநிதி வெ. திருஞானசம்பந்தர் அவர்களுக்கும் அவருடைய பாரியார் அவர்களுக்கும் வாழ்த்துக்களும் கூறினார்.

அடுத்து சிறப்பு விருந்தினரான திரு. அ. ஆ. அமிர்தலிங்கம் அவர்கள், கலாநிதி வெ. திருஞானசம்பந்தர் அவர்கள் தான் பிறந்த மண்ணிற்காக தன் தாயாரின் நினைவாக பிரம்ம ஆலய இல்லம் அமைத்துக் கொடுத்தார் என்றும் மயானத்தில் நீர் இன்மையின் நிலையை உணர்ந்து மயானத்திற்கருகில் ஒரு கிணற்றை அமைத்துக் கொடுத்தார் என்றும் இப்போது இவ்வூர்த் தேவையை உணர்ந்து இக்கலாச்சார மன்றை அமைக்க முன்வந்துள்ளார் என்றும் அவருக்கும் அவரது குடும்பத்திற்கும் நன்றியும் கூறினார்.

அடுத்து கலாநிதி வெ. திருஞானசம்பந்தர் அவர்கள் பதிலுரையில் எல்லோரும் இவ்வளவு நேரமும் பாராட்டியதற்கு நன்றி கூறி முப்பது ஆண்டுகளுக்கு முன் தான் தொழிலை ஆரம்பித்த காலத்தில், பிரபல எழுத்தாளர் திரு. மாயாவி அவர்கள் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருவதாகவும் அவரை அழைப்பதற்கு தன்னை உதவும்படி நண்பன் "அல்லி" ஆசிரியர் திரு. செ. குமாரசாமி அவர்கள் கேட்டதாகவும் அதற்காக தானும் நண்பன் திரு. குமாரசாமி அவர்களும் தனது காரில் தனது முன்னைய வழமையான உடையான கோற், சூற், ரையுடன் பலாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமான நிலையத்திற்கு சென்று அவரை அழைத்துவந்து அவரது கூட்டங்கள் முடிந்ததும் அவரை வழி அனுப்புவதற்காக யாழ் புகையிரத நிலயத்தில் காத்திருக்கும் போது திரு. மாயாவி அவர்கள் அல்லியாசிரியரைப் பார்த்து ''இவரைப் போன்று கொடைவள்ளல்களின் உதவி இருப்பதனால்த்தான் உங்கள் மலர் சிறப்பாக வெளிவருகின்றது'' என்று கூறினராம். அதற்குத்தான் அல்லியாசிரியர் அவர்கள்தான் அம்மலருக்கு முழுநிதியையும் செலவழிக்கிறார் என்றும் தான் எந்தவித உதவியையும் செய்யவில்லை என்றும் இந்தக்காரை மட்டும் தான் ஓடினேன் என்று விளக்கம் கொடுக்க நினைக்கையில் புகையிரதம் புறப்பட்டு விட்டது என்றும் பின்பு தான் அதை விளக்கச்சந்தர்ப்பமில்லாமல்போய் விட்டதாகவும் இப்போது நீங்கள் எல்லோரும் தன்னைக் கொடை வள்ளல் என்று கூறிப் பாராட்டும் போது அந்நிகழ்ச்சியை உங்களுக்கு பகிரங்கமாக கூறி விளக்க விரும்புகிறேன் என்றும் கூறினர். அத்துடன் சித்தி விநாயகர் சனசமூக நிலய அங்கத்தினர் தன்னை சித்தி விநாயகர் சனசமூக நிலைய திறப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக அழைத்தமைக்கு அவர்களுக்கு நன்றி கூறி, பிரம்ம ஆலய இல்லம், கலாச்சார மன்று ஆகியவற்றை அமைப்பதற்கு இடத்தை வழங்கி ஊக்கத்தை அளித்த சித்தி விநாயகர் தேவஸ்தான நிர்வாக சபையினருக்கும் நன்றி கூறி தான் சிறுவயதிலிருந்தே காந்தீயக் கொள்கைகளை விரும்புவதாகவும் எப்போதும் காந்தீயத்தைக் கடைப்பிடித்தே நடப்பதாகவும் கூறித் தானும் தனது குடும்பமும் உங்கள் எல்லோருக்கும் நன்றி கூறுவதாகவும் மேலும் உங்கள் எல்லோருக்கும் மேலும் உதவிகளைச் செய்வதற்கு சித்தி விநாயகரின் அருளை வேண்டுகின்றேன் என்றுகூறி விடை பெற்றார்

அடுத்து தலைவர் திருவாளர் நா. செ.நாகரத்தினம் அவர்கள் கலாநிதி வெ. திருஞானசம்பந்தர் அவர்



களுக்கு எல்லாவித அறிவும் இருக்கின்றதென்பது தெரியும் என்றும் சமய அறிவும் இருக்கின்றதென்பது இன்று சகலருக்கும் தெரிந்திருக்கும் என்றும் சமய குரவரில் ஒருவரான அந்த ஞானசம்பந்தர்தான் இந்த ஞானசம்பந்தர் என்று எண்ணத் தோன்றுகிறது என்றும் இவ் விழா இனிது நிறைவேற பங்குபற்றிய சகலரையும் வாழ்த்தி நன்றி செலுத்தினர்.

அடுத்து திரு. அ. முகுந்தன் அவர்கள் நன்றியுரையில் பல விதத்திலும் உதவிய எல்லோருக்கும், பிரதம விருந்தினர்க்கும், சிறப்பு விருந்தினர்களுக்கும், சித்தி விநாயகர் தேவஸ்தான நிர்வாக சபையினருக்கும், கட்டடக் கலைஞர்க்கும் நன்றி கூறினர்.

அடுத்து செல்விகள் குமாரசாமி, செல்வரத்தினம் ஆகியோர் வழங்கிய தேவாரத்துடன் கூட்டம் 11-00 மணியளவில் இனிது நிறைவேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவற்குழி அறிவொளி மன்ற தலைவர்
திரு. பொ. சுப்பையா (J. P.) அவர்கள்
வழங்கிய

## இப்பணி போற்றப்பட வேண்டியதே.

ஆன்ம ஈடேற்றத்திற்கு இறைவணக்கம் எவ்வளவு முக்கியமோ, அதேபோல கலை கலாச்சார முன்னேற்றத்திற்கு அறிவு வளர்ச்சி, உடல் விருத்தி ஆகியனவும் முக்கியம். இதைக் கருத்திற் கொண்டு உருவானதே நாவற்குழி சித்தி விநாயகர் சனசமூக நிலையத்தாரின் கலாச்சார மண்டபம். இம்மண்டபத்தை அமைப்பதற்கு உறுதுணையாக நின்றவர் திரு. வெ. திருஞானசம்பந்தர் (கணக்காளர்). இவர் தனது தந்தையாரின் நினைவுச் சின்னமாக இம்மண்டபத்தை அமைத்துள்ளார்.

இச் சனசமூகநிலைய நிர்வாகிகள் வாசிகசாலையையும், விளையாட்டிடத்தையும் ஆலயத்திற்கு அருகாமையில் அமைத்ததோடு, கலாச்சார வளர்ச்சிக்கென இம்மண்டபத்தையும் இங்கே ஒருங்கு அமைத்தது சாலப் பொருத்தமானதாகும்.

நீண்ட காலமாக நாவற்குழிப் பகுதிககு ஒரு கலாச்சார மண்டபம் இல்லாத குறை இருந்து வந்தது. அக்குறையை நீக்கியுள்ளார் பட்டயக் கணக்காளர் திரு. வெ. திருஞானசம்பந்தர். எம்மக்களின் உடல், உள, ஆத்மீக விருத்தியை கருத்திற் கொண்டு செயல்ப்படுத்தப்பட்டு வரும் இதுபோன்ற செயல்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் இவர்போன்ற அபிமானிகள் முன்வந்து ஆக்கப்பணிகளைச் செய்து கிராம வளர்ச்சிக்கு ஆதரவு நல்க வேண்டும்.

இம்மண்டபத்தின் திறப்பு விழாவின் போது எம் மன்றத்தின் ஆசியை வழங்குவதுடன், இம் மண்டபத்தில் கலை, கலாச்சார நிகழ்ச்சிகள் திறம்பட நடைபெற்று மக்களின் மனப்பாங்கு மேம்பட வேண்டுமெனவும் வாழ்த்துகிறேன்.

இப்பணி மேன்மேலும் சிறந்தோங்குக!

தலைவர்
நாவற்குழி அறிவொளி மன்றம்
பொ. சுப்பையா (J. P.)



## தாவர போசனம்

உலகில் வாழும் (5,000,000,000)ஐந்து பில்லியன் (Billion) [(50000) ஐம்பது ஆயிரம் கோடி (5000 மில்லியன்)] மக்களின் நூறிலொரு ($\frac{1}{100}$) பகுதியான (50,000,000) ஐம்பது மில்லியனுக்குச் சமமான மக்கள் தாவர போசன உணவை உண்பவர்கள். ஒரு பகுதியினர் உயிர் இனங்களைக் கொலை செய்து புசிப்பது ஜீவ காருண்யமற்ற செயல் என உணர்ந்து தாவர போசனத்தையே உண்கிறார்கள். வேறு ஒரு பகுதியினர் தாவரபோசன உணவே தேக ஆரோக்கியத்திற்கு உகந்தது என்று உண்கிறார்கள் வேறு ஒரு பகுதியினர் தாவர போசனக் குடும்பங்களில் பிறந்த காரணத்தால் தாவர போசனத்தையே உண்கின்றார்கள். வேறு ஒரு பகுதியினர் சிக்கனமாக வாழ்வதற்குத் தாவர போசனத்தையே உண்கின்றார்கள் மற்றும் பெரும் பகுதியினர் ஆசியாக் கண்டத்தின் மத கோட்பாட்டிற்கு உட்பட்டு சுத்த சைவ தாவர போசனத்தையே உண்கின்றார்கள். வேறு சிலர் இவற்றில் ஒன்றிற்கு மேற்பட்ட காரணத்தால் தாவர போசனத்தையே உண்கின்றார்கள்,

உலகிலேயே மிக உயர்ந்த சிறந்த விஞ்ஞானிகள், ஓவியர்கள், கணக்காளர்கள், தத்துவஞானிகள், அரசியல் வாதிகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர்கள், கைத்தொழில் உற்பத்தியாளர்கள் எல்லோரும் பொதுவாக தாவர போசனத்தை விரும்பி சிறந்ததாகக் கருதி உண்கின்றுககள்.

விஞ்ஞான வளர்ச்சிக்கு வித்திட்ட சேர். ஐசக்நியூட்டன் என்றால் எல்லோருக்கும் தெரிந்ததே. இவரும் தாவர போசனத்தையே உண்டவர் (Vegetables are good for yoa. By Alex Duval Smith. Mirror magazine Sunday April 30 1989)

சரித்திரப் புகழ்மிக்க லியனாடோடாவின்ஸி (Leonardoda Vinci) ஓவியரும் தாவரபோசகரே ஆவார்.

சரித்திரப் புகழ் வாய்ந்த கணிதமேதை சீனிவாசன் ராமானுஜம் பற்றி இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது நன்று. இவர் சிறுவயதிலேயே கணித ஆராய்ச்சிகளையும் ஆய்வுகளையும் மேற்கொண்டு குறிப்புப் புத்தகத்தில் குறித்து வைத்தார். இவற்றில் முதற் குறிப்புப் புத்தகத்தில் உள்ள கணித ஆய்வுக் குறிப்புக்களை மேல்நாட்டு சர்வகலாசாலைக் கணிதப் பேராசிரியர்களால் ஒரு பகுதியே புரிந்து கொள்ளக் கூடியதாய் உள்ளது. அவர்கள் மேலும் ஆய்வுகள் செய்துதான் இன்னும் அறிய வேண்டி உள்ளது. அவரது இரண்டாம் புத்தகத்தில் எழுதியவற்றை இன்னும் எத்தனை காலம் சென்றாலும் அறிந்து கொள்வது கடினமாயுள்ளது என்று கணித மேதைகள் கணிதப் பேராசிரியர்கள் கூடும் சர்வதேச மகாநாடுகளில் பேசிக் கொள்கின்றனர். இவரும் ஓர் தாவர போசகரே ஆவார். இவரின் அபார திறமையையும் தகுதியையும் சிந்திக்கும்போது நாங்கள் எத்தனை பெருமைக்கும் புகழுக்கும் பங்குடையாராகிப் பூரிப்படைகிறோம்.

உலகிலேயே விடுதலைக்காகப் போராடி சாத்வீக வழியில் நின்று வெற்றி கண்ட மகாத்மகாந்திஜி அவர்கள் தாவர போசன சீலரென்பது எல்லோரும் அறிந்ததே. அவர் எல்லோரையும் தாவர போசகராக மாற்ற வேண்டுமென்று விரும்பி அதற்காக பெருமளவில் பிரசாரங்கள் செய்து ஓரளவு வெற்றியும் கண்டவர்.

உலகிலேயே கைத்தொழில் முன்னேற்றம் அடைந்த அமெரிக்கதேசத்தில் முன்னோடியான (Henry Ford) ஹென்றி வ்வோட் என்பவரும் தாவர போசன காரர் என்பது மட்டுமல்லாமல் இதனையே எல்லோரும் உண்ண வேண்டும் என்று பிரசாரம் செய்தவர். அத்துடன் குதிரை, கழுதை, மாடு போன்றவற்றைப் போக்கு வரத்திற்கும், சுமை காவுவதற்கும் இழுப்பதற்கும் வயல்களை உழுவதற்கும் பயன்படுத்தித் துன்புறுத்தலாகாது என்று மிக ஆக்ரோஷமாக பிரசாரங்கள் செய்தார்.



"கிரேக்க தேசத்தில் இருந்த ஸ்பாட்டன்ஸ் (Spartans) என்னும் ஆதி வாசிகள் மிகப் பலசாலிகளாக இருந்தார்கள் என்பது உலகறிந்த விஷயம் அவர்கள் சைவ உணவையே உண்டார்கள் ஒலிம்பிக் வீரர்களாகத் திகழ்ந்த கிரேக்கர்களும் பண்டைய ரோமாபுரி காட்சிச் சண்டை வீரர்களும் சைவ உணவுக்காரர்களே. மத்திய சிலியின் சுரங்கத் தொழிலாளிகளும் துருக்கிய சுமை தூக்கிகளும் அபரிமிதமான தொழிற்திறமை படைத்தவர்களாகக் காணப்படுகிறார்கள் அவர்களுடைய தேகபலத்துக்குக் காரணம் அவர்களுடைய சைவ உணவு என்றே கூறப்படுகிறது சைவ் உணவு உண்பவர்கள் உணர்ச்சிவசப்படாதவர்களாகவும் சாந்தமானவர்களாகவும் காணப்படுகிறார்கள்"

(சஞ்சீவி—வார இதழ் 20-05-1989 அ குமரகுரு)

மனிதன் பிறக்கும் போது தாவர சுத்த போசனராகப் பிறக்கின்றான். பின்னர் அவனுடதய சூழல் அவனை மாற்றுகிறது. விலங்கினங்களில் தாவர போசனத்தை உண்ணுகின்ற விலங்குகள் பல உள்ளன, யானை, பசு, மான், முயல், குரங்கு முதலியனவாகும்;-

வலிமைக்கும் ஞாபகத்திறைமைக்கும்
உதாரணமானது. யானை,
பொறுமைக்கும் சாந்தத்திற்கும்
உதாரணமானது பசு.
வேகத்திற்கு உதாரணமானது
முயலும், மானும்.
குரங்கு மனிதனிலும் ஓர் அறிவு குறைவானதாயினும்
மனிதனைப் போன்று பலகருமங்கள் செய்யக்கூடிய
ஆற்றலும் திறமையும் உடையது என்பது எல்லோ
ருக்கும் தெரிந்ததே.

குரங்கிற்கும் மனிதனுக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. சில ஆராய்ச்சிகளில், குரங்கிலிருந்துதான் மனிதன் தோன்றினான் என்று கூறப்படுகிறது. சில ஆராய்ச்சிகள் குரங்கு இனத்தை ஒத்த வேறொரு இனம்தான் மனித இனம் என்று கூறுகிறது. அது எதுவாயிருந்தாலும் சரி. உலகப் பிறவிகள் யாவற்றிலும் மனிதப்பிறவி மேலானது. மனிதனுக்கு என வகுக்கப்பட்ட உணவு தாவரபோசனம் என்பது நன்கு புலப்படுகிறது. மனிதன் எல்லாவற்றையும் பகுத்தறிந்து செயல்பட வேண்டும். தவறான வழக்கங்களைக் காரணமின்றிப் பின்பற்றுவது புத்திசாலித்தனமன்று. ஆகவே சற்று சிந்திப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் வழமையில் உள்ள உணவு முறையை பின்வரும் பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(1) எந்த விலங்கினங்களையும் உணவாகக் கொள்பவர் (Carnivorous eaters)

(2) பசு தவிர்ந்த ஏனைய விலங்கினங்களை உண்பவர்கள் (Semi carnivorous eaters)

(3) விலங்கினங்களை உணவாகக் கொள்ளாமல் அவற்றின் முட்டைகளையும் தாவரங்களையும் உணவாகக் கொள்பவர் (Ova vegetarians)

(4) தாவர போசனத்துடன் பாலையும் உண்பவர்கள் (Lacto—vegetarians)

(5) பாலையும் தவிர்த்து தானியத்தாவரங்களை உணவாகக் கொள்பவர் (Vegetarians)

(6) தாவரங்களில் கிழங்கு வகைகளையும் வேர்வகைகளையும் (கரட், வெங்காயம், போன்றவை) தவிர்த்து உண்பவர்கள் Jains)

உணவை உண்பதன் காரணத்தை ஆராய்ந்து நோக்கின்:-

(1) பசியைத் தீர்ப்பதற்கு,
(2) உடலுக்கு சக்தியைக் கொடுக்க,
(3) உடலுக்கு வேண்டிய போஷாக்கை கொடுக்க,
(4) ஆரோக்கியத்துடன் வாழ்வதற்கு
(5) நீண்ட ஆயுளுடன் வாழ்வதற்கு

தாவரபோசனம் இவை ஐந்திற்கும் ஈடுடையது. பசியைத் தீர்ப்பதற்கு சுத்தமான தாவர போசனம் நிறையானது, மிக்க சுவையானது ஜீரணிக்கக் கூடியது, சிக்கனமானது, போசாக்கானது. எந்தச் சூழ்நிலையிலும் கிடைக்கக்கூடியது.

உடலுக்கு வேண்டிய உயிர்சத்து (Vitamin C) தாவர சுத்த போசன உணவில் மட்டுமே உண்டு. அசைவ உணவு இலகுவாக ஜிரணிப்பதற்கான குடலையோ இயற்கை கொடுத்திருப்பதாக கூறமுடியாது.

சக்தியைக் கொடுக்குமிடத்திலும் நிறைவான புரதம், மாச் சத்து, கொழுப்புச்சத்து, காபோவைதரேற்று முதலியன சுத்த போசனத்தில் நிறைய உண்டு.

போஷாக்கு நிறைந்த உணவு வகைகளுக்கும் ஜீவசத்துக்கள் நிறைய உள்ள தானியங்கள், பழவகைகள் மற்றும் கீரைவகைகளில் நிறைய உண்டு.



ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுகளின் படி சுத்தபோசனம் ஆரோக்கிய வாழ்க்கைக்குகந்தது என்பதைக் கண்டு பிடித்து பிரசாரம் செய்வது அதிகமானோர் அறிவர். இன்று உலகில் வாழும் நூறு வயதிற்கு மேற்பட்ட ஒரு மில்லியன் சனத் தொகையில் ஒரு சிறு பகுதியினரைத் தவிர்த்து ஏனையோர் தாவரபோசனத்தை உண்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சரித்திரரீதியாக, பொருளியல் காரணங்களுக்கென நோக்கினாலும், வைத்திய ரீதியில் நோக்கினாலும், சுகாதார காரணங்களுக்கென நோக்கினாலும் ஜீவ காருண்ய காரணங்களின் படி நோக்கினாலும் தாவர போசனம் மேலானது. இது எல்லோராலும் ஏற்கக்கூடியதும், விரும்பத்தக்கதும், போற்றக்கூடியதும் நன்மை பயக்கக்கூடியதுமாயுள்ளது.

மேலும் சமய குரவர்கள், நாயன்மார், தத்துவஞானிகள் ஆகியோர் தாவர போசனத்தையே உண்ண வேண்டுமென்று வேண்டியுள்ளனர். அதற்குரிய கோட்பாடுகளை வகுத்துள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாக தெய்வப் புலவர் "திருவள்ளுவர்" திருவாய் மொழிந்த

"அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின்
உயிர் செகுத்துண்ணாமை நன்று"

என்ற பொய்யா மொழி பொய்யா மொழிதான்.

தொகுத்துச் சொல்லியவர்:
திருமதி திருஞானசம்பந்தர் மனோன்மணி

எழுதியவர்;
செல்வி திருஞானசம்பந்தர் திருக்குமரிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவற்குழியூர்
# இளைஞர்களின் எழுச்சி

நாற்பது, ஐம்பது வருடங்களுக்கு மேலாக நாவற்குழியூர் இளைஞர்கள் முன்னேற்றப் பாதையை நோக்கி உள்ளார்கள். இவர்கள் சிறந்த கல்வித் திறன் உடையவர்களாகவும், பண்பு மிக்கவர்களாகவும், மதிநுட்பமுள்ளவர்களாகவும். பற்பல துறைகளில் முன்னோடியாகவும் உலகுக்கு நிரூபித்து உள்ளார்கள்.

அவர்களுள் கவிஞர்கள், மொழியாராச்சியாளர்கள், வைத்தியர்கள், எழுத்தாளர்கள், கலாநிதிகள், கணக்காளர்கள், முகாமைத்துவ ஆலோசகர்கள், அரசியலாளர்கள், உளவியலாராச்சியாளர்கள், கொம்பியூட்டர் விஞ்ஞானிகள், நூல் ஆசிரியர்கள் போன்றோர் உருவாகி உள்ளனர்.

இவர்கள் என்றும் ஒற்றுமையாகவும், பண்பாகவும், உயர்ந்த நோக்கு உடையவர்களாகவும், சமய நம்பிக்கை உடையவர்களாகவும், ஒழுக்கநெறி தவறாதவர்களாகவும், விடாமுயற்சி உடையவர்களாகவும், எண்ணிய கருமத்தை எண்ணியவாறு செய்து முடிக்கும் செயல்த்திறனும் உடையவர்கள் என்பது யாவரும் அறிந்ததே. பற்பல மாணவ மன்றங்கள், இளைஞர் குழுக்கள் இங்கே உண்டு.

உதாரணமாக இவர்களுள் ஒரு சிறு பகுதியினர் 1952 ம் ஆண்டு நாவற்குழி சித்திவிநாயகர் தேவஸ்தான மேற்கு வீதியில் கூடி எடுத்த புகைப்படத்தைக் காண்பீர்கள்.



தரையில் இருப்போர் - இடம் இருந்து வலம்: திரு சி திலகநாதன், திரு. ச. கதிர்காமநாதன், திரு சி. தில்லைநடேசன் திரு ச சிவயோகநாதன் திரு. பொ. பாலசுப்பிரமணியம்

ஆசனத்தில் அமர்ந்திருப்போர் - இடம் இருந்து வலம்: திரு. செ. சுப்பிரமணியம், திரு. செ. அமிர்தலிங்கம், கலாநிதி. வெ. திருஞானசம்பந்தர், திரு. செ. பீதாம்பரம், திரு. க வீரசிங்கம்

நிற்போர் – இடம் இருந்து வலம்: திரு. ந. தில்லைநடராஜா, திரு. செ. குமாரசாமி, திரு. வ தியாகராஜா, திரு த. கனகராஜா, திரு. செ சிவசண்முகநாதன், திரு. ந திருச்செல்வம், திரு. பொ. திருஞானசம்பந்தர் திரு. இ. பாலசுப்பிரமணியம் டாக்டர். செ. சொர்ணலிங்கம், திரு. செ. துரைஐயா, திரு. ச. பத்மநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரையில் இருக்கும் அன்றைய சிறுவர்கள் இன்றைய முன்னோடிகள்

(இடம் இருந்து வலம்)

1. திரு. சிதம்பரப்பிள்ளை திலகநாதன்:-
   பி. ஏ. (பேராதனைப் பல்கலைக்கழகம் 1963)
   ஏ. ஐ. பி. (வங்கியாளர்ப் பரீட்சை இலங்கை)
   எம். ஐ. எம். (இலண்டன்)
   எம். ஏ. கியூ. (பேராதனைப் பல்கலைக்கழகம்)
   எம். பி. ஏ. (வர்த்தக நிர்வாக முதுமானிப் பட்டதாரி கொழும்பு பல்கலைக்கழகம் 1987)
   ஏ. எம். பி. ஐ. எம். (முகாமைத்துவம் இலண்டன் 1984)
   ஏ. சீ. எம். ஏ. (இலண்டன் பட்டயம் பெற்ற முகாமைத்துவ கணக்காளர் 1984)
   முக்கிய முகாமையாளர், முகாமைத்துவ தொடர்பு முறைப் பிரிவு
   ஆலோசகர், விரிவுரையாளர், கம்பியூட்டர் முறைகள்.

2. திரு சங்கரப்பிள்ளை கதிர்காமநாதன்:
   முக்கிய எழுதுவினைஞர் காலால்ப்பகுதி கொழும்பு
   (இலங்கை அரசாங்க எழுது வினைஞர் பகுதி)

3. திரு. சிதம்பரப்பிள்ளை தில்லைநடேசன்:
   பி. ஏ. (பேராதனைப் பல்கலைக்கழகம்)
   முன்னால் பிரதி முகாமையாளர் நெல்சந்தைப் படுத்தும் சபை, தற்பொழுது கணக்காளர் (சுவிற்ஸலாந்து)

4. திரு. சங்கரப்பிள்ளை சிவயோகநாதன்
   பொறியியலாளர் (அவுஸ்திரேலியா)

5. திரு. பொன்னுத்துரை பாலசுப்பிமரணியம்:
   இலங்கை அரசாங்க எழுதுவினைஞர் சேவை
   (யாழ் போதனு வைத்தியசாலை)



## ஆசனத்தில் அமர்ந்திருக்கும் அன்றைய இளைஞர் இன்றைய அமைதியான சைவப்பெரியார்கள்

(இடம் இருந்து வலம்)

1. திரு. செல்லப்பா சுப்பிரமணியம்:
   இளைப்பாறிய பயிற்றப்பட்ட சிரேஷ்ட்ட ஆசிரியர்

2. திரு செல்லையா அமிர்தலிங்கம்:
   இளைப்பாறிய சிரேஷ்ட தபால் அதிபர்)

3. கலாநிதி வெற்றிவேல் திருஞானசம்பந்தர்.
   ஏ. பி. ரி. ஐ. (1953 இலண்டன்)
   ஐ. சி. எஸ். டிப்பிளோமா கோஸ் (1952-1956 இலண்டன்)
   எம். ஐ. எஸ். ஏ. (1953 கல்கத்தா)
   ஏ. சி. ஐ. (1953 பேமிங்காம், பிரித்தானியா)
   டி. கொம் (1954 பம்பாய்)
   ஜி. ஏ. கியூ. (பேராதனைப் பல்கலைக்கழகம்)
   பி. கொம். (முதல்வருட வர்த்தகப்பட்ட த்தேர்வு பேராதனை)
   பி. கொம். (வர்த்தகப்பட்டதாரி, இந்தியா)
   எம். கொம். (முதுமானி வர்த்தகப் பட்டதாரி, இந்தியா)
   ஏவ். எஸ். ஏ. ஏ. (பதிவு பெற்ற கணக்காளர் ஆய்வாளர் இந்தியா)
   பி. ஏச். டி. (கலாநிதிப் பட்டதாரி, இந்தியா)
   எப். ஐ. சி. ஏ. (இந்தியா 1957)
   லைசெ. சி. ஐ. ஏ. (இலண்டன் 1957)
   ஏ. சி. ஐ. எஸ் (1969 இலண்டன் பட்டயம் பெற்ற காரியதரிசிகளும் நிர்வாகிகளும்)
   ஏ. எம். பி. ஐ. எம் (1970 இலண்டன் முகாமைத்துறை)
   ஏ. சி. சி. ஏ. (1976 இலண்டன் பட்டயம் பெற்ற சேட்டி பயிட் கணக்காளர்)
   ஏ. சி. எம். ஏ. (1976 இலண்டன் பட்டயம் பெற்ற முகாமைக் கணக்காளர்)
   எம். பி. ஐ. எம். (1980 பிரித்தானிய முகாமைத்துவம்)
   எவ். சி. சி. ஏ. (1981 இலண்டன் பட்டயம் பெற்ற சேட்டிபயிட் சிரேஷ்ட்ட கணக்காளர்)
   ஏ. சி. ஏ. (1981 நைஜீரியா பட்டயக்கணக்காளர்)
   எவ். பி. ஐ. எம் (1984 பிரித்தானிய சிரேஸ்ட முகாமையாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ். சி. எம். ஏ. (1985 இலண்டன் பட்டயம் பெற்ற
சிரேஷ்ட முகாமைக் கணக்காளர்)
வரி ஆலோசகர்
பட்டயக்கணக்காளர்
பட்டயக்காரியதரிசி
பதிவு செய்த கணக்காய்வாளர்
அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர்
வர்த்தக மேம்பாட்டு ஆலோசகர்
முகாமைத்துவ ஆலோசகர்
சேட்டிபையிட் கணக்காளர்
திருஞானஸ் அன்கோ, திருஞானஸ் கட்டிடம்,
யாழ்ப்பாணம்.

4. திரு. செல்லையா பீதாம்பரம்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

5. திரு. கணபதிப்பிள்ளை வீரசிங்கம்
(பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

## நிற்கும் அன்றைய துடிப்புமிக்க இளைஞர்கள் இன்றைய வாழ்வில் வெற்றி கண்டவர்கள்
(இடம் இருந்து வலம்)

1. திரு. நமசிவாயம் தில்லைநடராஜா
உத்தியோகஸ்தர் கைதிகள் இலாகா (யாழ்ப்பாணம்)

2. திரு. செல்லையா குமாரசுமாமி
(அரசாங்க ஒப்பந்தக்காரர்)
(முன்னாள் அல்லி ஆசிரியர்)

3. திரு. வல்லிபுரம் தியாகராஜா.
(பயிற்றப்பட்ட சிரேஷ்ட ஆசிரியர்)

4. திரு. தம்பிஐயா கனகராஜா.
(அவுஸ்ரேலியாவில் பயிற்றப்பட்ட சிரேஷ்ட
பிசியதிரப்பிஸ்ற். யாழ் போதனா வைத்தியசாலை)

5. திரு. செல்லையா சிவசண்முகநாதன்.
(சிரேஷ்ட எழுதுவினைஞர் இலங்கை அரசாங்க எழுது
வினைஞர் சேவை (உள்நாட்டு இலாகா)



6 திரு. நமசிவாயம் திருச்செல்வம்:
(நீர்ப்பாசனத் திணைக்கள மேற்பார்வையாளர் கிளிநொச்சி)

7. திரு. பொன்னுத்துரை திருஞானசம்பந்தர்.
(ஓய்வுபெற்ற சிரேஷ்ட அரசாங்க வரைஞர், ஓவியர்,
சிற்பக் கலைஞர்)

8. திரு இராமலிங்கம் பாலசுப்பிரமணியம்.
(சட்டத்தரணி பகிரங்க நொத்தாரிசு (நல்லூர்)

9. டாக்டர் செல்லையா சொர்ணலிங்கம்:
எம். பி. பி. எஸ். (இலங்கை)
எம். அர். சி. ஓ. ஜி. (பிரித்தானியா)
ஆலோசகர் மகப்பேற்று வைத்திய நிபுணர் (இலண்டன்)

10. திரு. செல்லையா துரைஐயா:
(முன்னாள் உப தபால் அதிபர்)

11. திரு. சங்கரப்பிள்ளை பத்மநாதன்:
(இலங்கை அரசாங்க எழுதுவினைஞர் சேவை,
காவல்ப்பகுதி அத்திஅட்சகர் அலுவலகம் கொழும்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவருடைய கல்வி தொழில் முன்னேற்றத்தை மிகச் சுருக்கமாகவும் அடக்கமாகவும் தருவதன் நோக்கம் நாவற்குழி வாழ் சைவப் பெரு மக்களின் மதிப்பு, புகழ், பெயர், நல் இலக்குகள் விடாமுயற்சி, நற்பண்பு, சமைய நம்பிக்கை, விவேகம் துணிச்சல், நேர்மை, ஒழுக்கம், போன்ற வேறும் பல சிறப்பியல் புகளைக் காட்டுவதற்கும், இன்றைய இளைஞர்களுக்கு உற்சாகம் ஊட்டு வதற்கும்.

நாவற்குழியூர் வாழ்வாங்கு வாழ்ந்த
சைவப் பெரியார்
முத்தையா வெற்றிவேல் அவர்களின்
**சிந்தனைப் பொன் மணி மொழிகளான**

''பலதையும் பத்தையும் அறிய ஆவலு அளவன் விவேகி ஆகின்றான்''

''மனித வளத்தின் முக்கிய வளம் அறிவு''

''ஒன்றையும் செய்யத்துணியாதவன் எதையும் செய்து முடிக்க முடியாது''

''பொறுதியுடனும் உறுதியுடனும் செயல் படுபவன், இறுதியில் வெற்றி பெறுவான்''

''பெரும் விடாமுயற்சியும், இடையிடையே சலிக் காமல் தொடர்ந்து சிரமத்தின் மத்தியில் தனித்து நின்று வியர்வை வியர்வை சிந்தி உழைப்பவனே வெற்றிக்குரியவன்''

என்பதனை எவர்க்கும் எந்த சந்தர்ப்பங்களிலும் வழிகாட்டியாகு மென்பதற்கும், நாவற்குழி இளைஞர் களின் பெரும் வளர்ச்சியும் சாதனைகளும் சான்று பகரும்.

நன்றி. நல்நிறைவு.

சுபம்



## விநாயகர் திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல் பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவர்
கற்பகம் எனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே

முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவனுறைரதம்
அச்சதுபொடி செய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமானே

[அருணகிரி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்பது ஆண்டுகாலமாக ஏற்பட்ட பெரும் ஏமாற்றங்கள்
இடர்கள் மத்தியில் இறைவன் திருஅருளால் சில சித்திகளும்,
வெற்றிகளும் கிட்டியதை வெளிக்காட்டும்
அமைதியான தனித்துவம் மிக்க

## திருஞானஸ் கட்டடம்




*Perseverіng efforts, hardwork and study for over the last forty years have experienced many great disappointments and distress. Yet few good results and successes have been achieved with Creater's Gracious Blessings. This is reflected by this exceptionally modest Building.*

---

அச்சுப்பதிவு: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், யாழ்ப்பாணம்.
வெளியிடுபவர்: திருமதி. மனோன்மணி திருஞானசம்பந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org